நெறி காணீரே!

கல்லாலும் செம்பாலும் பண்ணிவைத்த
படிவத்தைக் 'கடவுள்' என்றே
நல்லாவின் பாலாலும் நெய்யாலும்
வழிபாடு நாளும் செய்தே
எல்லாரும் அவர்பெற்ற மாந்தரென்
பீர்!
ஆனாலும் எண்ணற் றோரைச்
சொல்லாலும் மக்களெனச் சொல்லு
கிலீர்;
தாழ்த்துகின்றீர்; நெறிகா ணீரே!

1—3—60



ஆசிரிய

பெருஞ்சித்தி

இலக்கி

திங்கள்

25

"தென்மொழி" வளர்ச்சிக்கு

—()—

'தமிழ்மொழி தனித்தியங்கும்' என்று பேசுவோரும், தமிழ் நாட்டில் வடமொழி தலைகாட்டக்கூடாது' என்று கருதுவாரும் தாம் பேசுங்காலும், எழுதுங்காலும் தனித்தமிழில், பிறமொழித் துணையின்றிப் பேசவும் எழுதவும் செய்கின்றனரா எனின் வெட்கக்கேடே. இக் கோட்பாடுகளுக்காகவே, தமிழரால் நடத்தப்பெறும். தமிழ்த் தாளிகைகளும் அவ்வாறு தனித்தமிழில் நடத்தப்பெறுவனவாக வில்லை. இந்நிலையைத் 'தென்மொழி' அடியோடு மாற்றியது. தனித் தமிழிலேயே பாட்டுக்கள் இசைக்கவும், உரைநடை எழுதவும், நாடகங்கள் வரையவும் முடியும் என்று கூறிச்செயல்படுத்தியும் வருகின்றது.

'தனித்தமிழில் எழுதினால் மக்கள் எளிதில் புரிந்து கொள்ளார்' என்று மறுக்கும் அத்தகையோரின் ஆற்றலின்மையைத் 'தென்மொழி' எடுத்துக்காட்டியது.

தாளிகையுலகிலும், தமிழ் உலகிலும் ஒரு புதுமையை ஏற்படுத்திய பெருமை தென்மொழிக்கு உண்டெனில், அதை மறுப்பார் இலர்.

புதுமை விரும்பும் மாணவரும், ஆசிரியரும் இதனைப்போற்றி வரவேற்பதொன்றே நாம் கூறுவதை வலியுறுத்தும்.

தென்மொழியை இருகை நீட்டி வரவேற்பார் தாம் வரைந்துள்ள மடல்களை அவ்வாறே வெளியிடின் நூற்றுக்கணக்கான பக்கங்களைக் கொண்ட ஒரு கருத்து நூலாக அது திகழும்.

இத்தகைய சிறப்பு நலன்களால் மட்டும் ஒரு தாளிகை வளர்ந்துவிடுவதில்லை என்பதை நாம் இதனைத்தொடங்கி நான்கைந்து திங்கட்குப்பின் உணரவேண்டுவதாயிற்று.

இதுவரை வெளிவந்த தென்மொழிக்கு எத்தகைய இடர்ப்பாடுகள் இருந்தன என்பதைப் பின்பு அறிவிக்கின்றோம். கடந்தகால நிகழ்ச்சிகளால் நாம் அறிவது இது:—

தென்மொழிக்கு ஒரு தனி அச்சகம் ஏற்பட்டாலொழிய, இது மேலும் சிறப்புற வழியில்லை.

ஆதலின் தென்மொழிக்கு உறுப்பினரா யிருப்போர் ஒவ்வொருவரும் தம்வழியில் ஒவ்வோர் உறுப்பினரைச் சேர்த்துவைத்து இதன் அச்சக வளர்ச்சிக்கு உதவுமாறு வேண்டுகின்றோம்.

இதன்பால் அன்புகொண்ட தமிழன்பர் தம்மால் இயன்ற பொருளுதவிகளைச் செய்யுமாறு கைகூப்புகின்றோம்.

இதன் வளர்ச்சியில் பங்குகொண்ட விற்பனையாளர் மேலும் பல படிகளை விற்றுத் தென்மொழி வளர உதவுமாறு பணிகின்றோம்.

ஆசிரியராயிருப்போர் தம் மாணவர்க்கும், நண்பர்க்கும் தென்மொழி பற்றிக்கூறி அன்னாரையும் இதனை வாங்கிப் படிக்கச் செய்யுமாறு தலை தாழ்த்துகின்றோம்.

'தென்மொழி' பலராலும் வரவேற்கப்படுகின்றது என்று நாம் கூறுவதைத் தமிழன்பர் மெய்ப்பிப்பர் என்று நம்புகின்றோம்.

தமிழுக்கு உயிர்தரவேண்டாம்; உழைப்பையாவது நல்க வேண்டாமா? உங்கள் முயற்சி வெற்றியளிக்கட்டும்.

அன்பன்

பெருஞ்சித்திரன்.

தென்மொழி
இலக்கிய இதழ்

'கெஞ்சுவதில்லை பிறர்பால்! அவர்தம் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை' எனவே தமிழர் தோளெழுந்தால்,
எஞ்சுவதில்லை புவியில் எவரும் எதிர்நின்றே!

இயல் ௧ | திருவள்ளுவராண்டு ௲௯௯௧ மாசித்திங்கள் ௧௮ (1—3—60) | இசை ௧௪

காவற் பெண்டிர்

கழகக் காலத்தில் ***காவற்பெண்டு*** என்று ஒரு பெண் புலவர் இருந்தார். அவர் பாடியதாக உள்ள ஒரே பாட்டாகிய புறநானூறு 86-ஆம் பாட்டில், தன் மகனை 'யாண்டுளான்?' என்று விளித்த ஒரு பெண்ணிற்கு, அவன் யாண்டுளனோ? அறியேன்; புலி இருந்து, எழுந்து போகிய கல்முழை போல அவனை ஈன்ற வயிறு இதுதான். எழுந்து போனவன், ஒருவேளை போர்க்களத்தில் தோன்றுவன் ஆகலாம்" என்று விடை கூறு முகத்தான், தமக்குள்ள மறவுணர்வை வெளிப்படுத்துகின்றார். இவர் பெயர் சில படிகளில் ***காதற்பெண்டு*** என்றுங் குறிப்பிடப்பெறுகின்றது. காதலற்ற பெண்டிர் இருந்தாலன்றோ காதற்பெண்டு என்ற சிறப்புக் காரணப்பெயர் பொருந்தும். ஆதலின் காதற்பெண்டு என்பதினும் காவற்பெண்டு என்பதே பொருத்தம் உடையதாம்.

காவற்பெண்டு என்னும் பெயர் செவிலித்தாய்க்கு வழங்கிவந்ததாக அறிகின்றோம். இப்பெயர் இப்பொருள் தருவதாயின், மேற்குறித்த புறநானூற்றுப் பாட்டில், ***"ஈன்ற வயிறோ, இதுவே"*** எனவரும் அடிக்குப் பொருளில்லாமற் போகின்றதன்றோ? காவற் பெண்டிராயினும் ஏவற்பெண்டிராயினும், தாமும் இல்லறத்தே ஈடுபட்டு வாழ்க்கை நடத்தியிராமல் இருப்பரோ? என்று எண்ணி முன்னெழுந்த ஐயத்திற்கு அமைவு கூறி அடங்கலாம். இஃது எவ்வாறாயினும் பழந்

தமிழகத்தில் **காவற் பெண்டிர்** என்பது செவிலித்தாயரையே குறித்து வந்தது என்பதற்குச் சான்றுகள் உள.

'விளையாடு சிறுதேர் ஈர்த்துமெய் வருந்தி
அமளித் துஞ்சும் ஐம்படைத் தாலிக்
குதலைச் செவ்வாய்க் குறுநடைப் புதல்வர்க்குக்
காவற் பெண்டிர் *கடிப்பகை யெறிந்து'*

எனவரும் மணிமேகலை (7 : 55–58) அடிகளாலும்,

கோவலன், கண்ணகி முதலியோர் உயிர் துறப்பக்கேட்டு வருந்தி,

'எனைப்பெரும் துன்பம் எய்தி,
காவற் பெண்டும், *அடித்தோழியும்'*

சாத்தனுடன் உறைந்ததேவந்தியும் உடன்கூடிச் 'சேயிழையைக் காண்டும்' என்று, மதுரை மாநகர் புகுந்து........"

— எனவரும் சிலப்பதிகார உரைப்பாட்டு மடையாலும் (வாழ்த்துக் காதை), காவற் பெண்டிர் தம் அரற்றுக அடிகள் குறிக்கின்ற பகுதிகளாலும் காவற் பெண்டிர் செவிலித் தாயரே என அறியலாம்.

நாம் ஈண்டு எழுதப் புகுவது மேற்குறித்த செவிலித் தாயராகிய பழந்தமிழகத்துக் காவற் பெண்டிரைப்பற்றியுமன்று; காவற்பெண்டு என்ற பெண் புலவரைப்பற்றியுமன்று.

அறிவுச் சீர்மையும், நாகரிக உயிர்ப்பும் பெருகி வருகின்ற இக்காலை, தமிழ்நாட்டு அரசியலார் நிறுவப் போகும் பெண்டிர் ஊர்காவற் படைக்கு (Women Police) உறுப்பினராகப் போகும் **காவற் பெண்டிரைப்** பற்றியே நாம் ஒரு சில கூற விரும்புகின்றோம்.

இம்முறை பற்றிப் பலர் பலவாறு கருத்துரைக்கின்றனர். இது நல்லது என்பாரும். அல்லது என்பாரும் உளராதலால், நம் கருத்து என்ன என்பதை அறிவிக்கவே இதனை எழுதப் புகுந்தோம்.

இக்காவற் பெண்டிர் படையை நிறுவப் போகும் அரசியலார் இதற்குக் கூறும் பொருட்டுக்கள் எவையெனின், பெண் குற்றவாளிகளை ஆண் ஊர்காவலர் பாதுகாக்கும் நிலை பெருமைக்கு ஏற்றதில்லை என்பதும், ஆண்கள்கேட்டு அறியத்தகாத சில செய்திகளைக் காவற் பெண்டிரைக் கொண்டு கேட்டறியக் கூடும் என்பதும், சிறுவர் சிறுமியர் குற்றஞ் செய்வாராயின் அவரைத் திருத்துதற்கு இவரே ஏற்றவர் என்பதுமாம். இக்

கருத்துக்களை வரவேற்பாரே இக் காவற் பெண்டிர் (Women Police) முறையைப் போற்றுகின்றனர்.

இனி இதனை வெறுப்பார், இம்முறை கொடிது எனக் கூறுதற்குரிய பொருட்டுக்களையும் கூறுவாம். பெண்டிர் காவலுக்கு ஏற்றவரல்லர் என்பதும், கல்லிலும் முள்ளிலும், இரவிலும் பகலிலும், தனிமையிலும் குழுவோடும், நல்லவர் பாலும் தீயவர் பாலும், நெருங்கிக் கலந்து பணியாற்ற வேண்டிய இந்த ஊர்காவல் (Police) வேலை எளிமையும், இனிமையும் வாய்க்கப் பெற்ற இவர்க்கு ஏற்றதன்று என்பதுமே தலையாய கருத்துக்களாம். இவ்விரு வழிமுறைகளைப்பற்றியும் நாம் இனி ஆராய்வோம்.

குற்றவாளிகளில் பெண்களும் இருப்பர். இளையரும் முதியரும் ஆகிய இப்பெண்டிர் தம்பால் நெருங்கி ஆண் ஊர்காவலர் செயல் படுவது உண்மையில் வரவேற்கத் தக்கதன்று. அவ்வாறு செயல்படுவோரும் அப்பெண்டிர்க்கு ஏதும் தீங்கு நேராமல் அவரையும் தம்மையும் காத்துக்கொள்வர் என்று எதிர்பார்த்தலும் அறிவுடைமையன்று. பெண்டிரை இரவுவேளைகளில் ஓர் ஊரினின்று மற்றோர் ஊர்க்கு அழைத்துப் போகும் ஊர் காவலர் சிலர் அவரிடம் தவறுபட ஒழுகுகின்றனர் என்றும், தம் மனைவி மக்களைப் பிரிந்து நெடுந் தொலைவில் பலநாட்கள் வேலை மேற்கொண்டுள்ள ஆண் ஊர்காவலர் சிலர், ஆங்காங்குள்ள பெண்டிர்க்குத் தொல்லை தருகின்றனர் என்றும், இரவு வேளைகளில் நகர்வலம் வந்து ஊர்காக்கும் பணியாளர் இருள் மண்டிய தெருக்களிலும், ஒதுக்குப் புறங்களிலும் அரிதாகத் தென்படுங் கணவர் மனைவியரையும், பிடித்துப் போய், அவர்மேல் ஐயக் குற்றம் சாட்டி அவ்விரவு கழியும் வரை அக்கணவனை ஓர் அறையிலும், மனைவியை ஓர் அறையிலும் தனித்தனியே அடைத்து வைப்பதும், இரவுக்காவலரில் சிலர் அக்குடும்பப் பெண்டிர் தம்பால் தம் விலங்குணர்வால் கொடுஞ்செயல் நிகழ்த்துகின்றனர் என்றும் அப்பொழுதைக்கப்பொழுது வரும் செய்திகளின் வாயிலாக அறிந்து மிகவும் மனங்கவன்றும், கனன்றும் போயிருக்கின்றோம். இதற்கு வலித்தமாக, இரண்டு மூன்றாண்டுகளுக்கு முன் தஞ்சைப்பகுதிகளில் புயல் வீசிய காலை, ஆங்குச்சென்று அழிவுப்பகுதிகளைக் காவல் செய்யப் போன ஓர் ஊர் காவற்குழுவினர், துன்பத்தால் நொந்து புழுங்கிச் செய்வதறியாது துடித்து நின்ற அவ்விடத்துப் பெண்டிர் சிலரிடம் ஒழுங்கற்று நடந்ததையும், அரசியலார் அதுபற்றி ஆய்ந்து அவரில் பத்துப் பதினைந்து பெயர்க்குக் கடுமையாகத் தண்டனை கொடுத்ததையும் எடுத்துக்கூற விரும்புகின்றோம்.

இத்தகைய கொடுமை நிகழ்ச்சிகளை எண்ணும் பொழுது இப்பெண்களைக் காத்தற்கென்று ஏன் ஆண் காவலரை வைத்தல் வேண்டும் என்று எவரும் எண்ணுமலிரார்.

இனிப், பெண்மை என்பது பலராலும் விரும்பப்படுவ தாகும். இதற்கு வேர்ச் சொல்லான 'பெள்' என்பது, 'விழைதல், விரும்புதல், அன்பு,' என்று பொருள்படும். ஓர் ஆணை விடப் பெண்ணே பலராலும் விரும்பப்படுகின்றாள். அழகு நலங்குன்றிய கொடும் பெண்டிராயினும், எங்கும் எவராலும் எந்நிலையிலும் விரும்பப்படுமாறு அவர்க்கு உடல் உறுப்புக்கள் அமைந்துள்ளன. பார்த்தவுடன் அஞ்சியோடாமல், சுற்றிச் சூழ்ந்து வளைத்துக்கொண்டு, பலராலும் விரும்பப்படும், பெற்றியையுடைய ஒரு பெண் எவ்வாறு மற்றவரை அடக்கியாளல் இயலும்.

பட்டை தடிந்தும், முருடு கட்டியும், செம்மையேறிக் கருத்து உரஞ்சான்று நிற்கும் மரம் அன்றோ உயர்ந்த வீட்டுக் கூரையைத் தாங்குந் தூணாக அமைதல் முடியும். மென்மை எண்ணமும், நாணும், அன்பும், குழைவும் சான்று, எளிய உடலும், ஏலாத உடலுறுப்புக்களும் பொதிந்து, பிள்ளைப் பேறு, குருதிப் போக்கு முதலிய இயற்கை முறைகளால் வலிவு குறைந்த பெண்ணாகிய ஒரு கொடி அதிற் பூத்துக் குலுங்கும் மலர்களையே தாங்காது மண்மேல் ஒசிந்து வீழ்கின்ற போழ்ந்து, அக்கொடி வேறு ஒரு பொருளைத் தாங்குவது எங்ஙன்? அது அவ்வாறாக, பொறுப்பும், காவல் திறமும், உள்ள உரனும், உடல் வன்மையும், ஏக்கழுத்தும், பீடு நடையுமே மிக மிக வேண்டிய ஊர்காவல் வேலைக்குப் போட்டியிடும் ஆண்களிற் சிலரும், போதிய உயரமும், மார்புப் பெருக்கமும், ஓட்டத்திறனும், இன்றித் தள்ளப்படுகின்றனர். அவரை விஞ்சிய திறமையோடல்லவா இப்பெண்டிர் இயங்குதல் வேண்டும்.

பெண்டிர் இதுகாறும் ஆற்றிவரும் ஆசிரியப்பணி, மருத்துவப் பணி, கணக்கர் பணி, தட்டச்சுப் பணி, ஒரோவோர் ஆள்மைப் பணி முதலிய பணிகள் எல்லாவற்றினும் காவற்பணி கொடுமை சான்றதென்பதை அறிஞர் எண்ணிப்பார்த்தல்வேண்டும்.

இத்தகைய சிக்கல்களைவிட, ஆண்காவலர் தம்மால் வரும் தீங்குகளைக் களையவும், பெண் குற்றவாளிகட்குப் பாதுகாப்புச் செய்யவும் பெண்டிர் தேவைப்படுகின்றனரே எனின் அது ஆராய்தற்குரியதே.

(தொடர்ச்சி 37ம் பக்கம் பார்க்க)

பண்டைத் தமிழர் விழாக்கள்

கழகக் காலத்தில் தமிழகத்தில் திருவிழாக்கள் கடவுள் வழிபாடு என்னும் ஒரு நோக்கினையே முதன்மையாகக் கொண்டு நடைபெற்றன. அக்காலத்தில் முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் என்ற நால்வகை நிலங்களுக்கு ஏற்பக் கடவுளர் அமைந்திருந்தனர். முல்லைநில மக்கள் திருமாலையும், குறிஞ்சிநில மக்கள் முருகனையும், மருதநில மக்கள் இந்திரனையும், நெய்தல் நில மக்கள் வருணனையும் தத்தம் வழிபாடு கடவுளராகக்கொண்டிருந்தனர்.

> *"மாயோன் மேய காடுறை உலகமும்*
> *சேயோன் மேய மைவரை உலகமும்*
> *வேந்தன் மேய தீம்புனல் உலகமும்*
> *வருணன் மேய பெருமணல் உலகமும்"*

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். இக்கடவுளர்க்குத் தமிழ் மக்கள் எடுத்த சிறப்புக்கள் பல விழாக்களாக விளங்கின. பாலை நிலத்திற் கொற்றவைக்கு விழா நடத்தல் மரபு.

விழாவில் கலைச்சிறப்பு:

கடவுள் வழிபாட்டுடனே கலைச்சிறப்பும் திருவிழாவில் முதன்மை பெற்றிருந்தது. தமிழ்மக்கள், தமக்கென வரையறுத்துக் கூறிய கருப்பொருள்களுள் தெய்வத்தையும், பறை, யாழ் முதலிய இசைக்கருவிகளையும் கொண்டிருந்தனர். தெய்வமும் கலையும் கலைப்பொருள்கள் என்று கொண்ட தமிழ் மக்களுடைய உயரிய எண்ணம் வியந்து பாராட்டுதற்குரியது.

> *"தெய்வம் உணாவே மாமரம் புட்பறை*
> *செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ*
> *அவ்வகை பிறவும் கருவென மொழிப"*

என்று தொல்காப்பியர் கூறுகின்றார். ஈண்டுத் தெய்வத்தோடு யாழின் பகுதியும் சேர்த்துரைக்கப்பட்டது. சிற்றூரிலும் பேரூரிலும் நடந்த விழாக்களில் விறலியர் (ஆடல் மகளிர்) பங்கு கொண்டு பல்வகை ஆடல்கள் புரிந்தனர் என்று கழக நூல்கள் உரைக்கின்றன. பெரிய ஊரில் நடைபெறும் திருவிழாவில் பொருநர் (கோலம் புனைந்து ஆடுவோர்) பலர் கூடித் தமது கலைத்திறனைக் காட்டியபின்பு ஊருக்குத் திரும்புவது வழக்கம் என்பதைப் பொருநராற்றுப்படையின் பின்வரும் தொடக்கவரிகள் தெரிவிக்கின்றன:

பண்டாரகர்
மா. இராசமாணிக்கனார் எம்.ஏ

"அருஅ யாணர் அகன்றலைப் பேரூர்ச்
சாறுகழி வழிநாள் சோறுநசை யுறாது
வேறுபல முன்னிய வீரகறி பொருந!"

(சாறு-விழா)

தெய்வவுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் கலையுணர்வால் பெற்ற மகிழ்ச்சியும் மக்களிடம் விழாக்காலங்களில் நிரம்பியிருக்குமன்றோ? 'விழா' என்னும் சொல் 'விழைவு' என்னும் சொற்பொருளின் அடியாகப் பிறந்தது என்பதைக் காணும்போது இவ்வுண்மை முற்றும் புலனாகும். இக்காலத்தும் கொண்டாட்டம் என்ற சொல்லை விழா என்னும் பொருளில் நாம் பயன்படுத்துகின்றோம்.

நகரத்தில் விழாக்கள்

காலப்போக்கில் தெய்வவிழாக்கள் சிற்சில நேரங்களில் சிறப்புடன் நடந்தேறின. திருமால்வழிபாடு திருமாலிருஞ்சோலை, திருவரங்கம், திருவேங்கடம் முதலிய இடங்களிலும், சிவவழிபாடு தில்லைமுதலிய இடங்களிலும், சிறப்பாகச் செய்யப்பட்டுவந்தன. அதேகாலத்தில் பூம்புகார்போன்ற பேரூர்களில் பல கோயில்களில் விழாக்கள் கொண்டாடப்பட்ட நிலையினையும் நாம் இலக்கியச் சான்றுகள் கொண்டு அறிகின்றோம். காவிரிப்பூம் பட்டினத்தில் நடந்த இந்திர விழாவின்போது பற்பல கோயில்களிலும் நடந்த விழாக்களைச் சிலப்பதிகாரம் எடுத்துக் கூறுகின்றது.

"பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்
அறுமுகச் செவ்வேள் அணிதிகழ் கோயிலும்
நீல மேனி வாலியோன் கோயிலும்
பால்வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேவேறு கடவுளர் சாறுசிறந் தொருபால்"

அதேகாலத்தில் சான்றோர், அரசர், கற்புடைப் பெண்டிர் ஆகியோர் தெய்வங்களாக வழிபாடு இயற்றப் பெற்றனர். சிலப்பதிகாரத்தின் வஞ்சிக்காண்டம் கண்ணகிக்குச் சேரன் செங்குட்டுவன் எடுப்பித்த கோயிலையும் அதில் அவன் நடத்திய விழாவையும் தெரிவிக்கின்றது. உரைபெறு கட்டுரை என்னும் பகுதியில் கொங்கிளங்கோசர். இலங்கைக்கயவாகு ஆகியோரும் கற்புடைப் பெண்டிர்க்கு விழாவணி நிகழ்த்திய செய்தி காணப்படுகிறது. பிற்காலச் சோழமன்னர் தம் பெற்றோர்கட்கும் சிறப்புறு மனைவியர்க்கும் கோயில்களை அமைத்து விழாச்செய்தமையைக் கல்வெட்டுக்களால் அறிகிறோம்.

இந்திரவிழா

அரசன் பிறந்தநாள் விழா, முடிபுனைவிழா, கார்த்திகை விழா முதலிய பலவகை விழாக்கள் கழக நூற்களில் குறிக்கப்பட்டுள்ளன. அவற்றுள் இந்திரவிழாவும் புதுநீர் விழாவும் குறிக்கத் தக்கவை.

சிலப்பதிகாரமும் மணிமேகலையும் இந்திரவிழாவின் சிறப்பைத் தனித்தனிக் காதைகளில் அமைத்துக் கூறுகின்றன;

> "மாயிரு ஞாலத்து மன்னுயிர் காக்கும்
> ஆயிரத் தோரெட் டரசுதலைக் கொண்ட
> தண்ணறுங் காவிரித் தாதுமலி பெருந்துறை
> புண்ணிய நன்னீர் பொற்குடத் தேந்தி
> மண்ணக மருள வானகம் வியப்ப
> விண்ணவர் தலைவனை விழுநீ ராட்டி"

எனச் சிலப்பதிகாரமும்,

> "விண்ணவர் தலைவனை வணங்கி முன்னின்று..........
> மேலோர் விழைய—விழாக்கோள் எடுத்த நாலேழ்நாள்....."

என மணிமேகலையும் இந்திரனுக்கு நடந்த விழாச் சிறப்பினைப் போற்றியுரைக்கின்றன.

காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள மருவூர்ப்பாக்கம், பட்டினப்பாக்கம் ஆகிய இடங்களில் வாழ்ந்த தொழிலாளரும் கலைஞரும் வணிகரும் இந்திரவிழாவின்பொருட்டுத் தத்தம் இருப்பிடங்களைத் தூய்மைசெய்தனர். சிலர் காவற் பூதத்தின் இருக்கையில் அவரை, துவரை, எள்ளுருண்டை, பூ, புகை, பொங்கல் முதலியவற்றைச் சொரிந்து துணங்கைக் கூத்தாடினர். மறக்குடி மகளிர்,

> "பசியும் பிணியும் பகையும் நீங்கி
> வசியும் வளனும் சுரக்கென வாழ்த்தி"

ஆரவாரத்துடனே பூப்பலியிட்டுப் போயினர். பற்பல கடவுளர்க்கு விழாக்கள் ஒருபால் நடந்தன; அருகர்நிலையங்களில் அறமுரைத்தலும் பிற திருக்கோயில்களில் வழிபாடுகளும் ஒருபால் சிறப்புற்றன; பகைமன்னர் தமது அடிமைத்தளை நீங்கப்பெற்று ஒருபால் விடுதலை பெற்றனர்; பல்வகை இசைவல்லார் ஒருபால் இனிய இசைவிருந்தளித்தனர்.

இந்திரவிழாவில் சமயக் கணக்கரும் கணியரும் பல மொழி பேசும் மக்களும் ஐம்பெருங் குழுவினரும் எண்பேராயத்தாரும் கலந்துகொண்டனர். பூமலிதெருக்களிலும், பல மன்றங்களிலும் நிறைகுடம் பொற்பாலிகை, பாவைவிளக்கு முதலியன பரப்பப்பட்டன. கமுகு, வாழை, கரும்பு முதலியன நடப்பட்டன. பசும்பொன்னாலாகிய தூண்களில் முத்துமாலைகளை முறையாக

மக்கள் தொங்கவிட்டனர்; தெருக்களிலும் மன்றங்களிலும் பழைய மணலை மாற்றிப் புதுமணலைப் பரப்பினர்; மாடங்களிலும் வாயில்களிலும் கொடிகளைக் கட்டினர். குளிர்ந்த மணலையுடைய பந்தல்களிலும், அம்பலங்களிலும் பல அறிவுரைகளைக்கேட்க விரும்புவோர் கூடினர். சமயக்கணக்கர் தத்தம் சமயத்தில் பொருந்திய பொருள்களைக் குறித்துப் பட்டி மன்றங்களில் அமர்ந்து சொற்போர் புரிந்தனர்.

புதுநீர் விழா

ஆண்டுதோறும் ஆடித் திங்களில் ஆறுகளில் புதுநீர் வருதல் மரபு. நீர்மக்களுக்கு உயிர்போன்றதன்றோ? அதனால் அப்புது நீர் வரவை விழாவாகக் கொண்டாடுதல் தமிழ் மரபு. இவ்விழா மதுரையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது என்பதைப் பரிபாடல் தெரிவிக்கின்றது. முகைப்பருவத்தர்; முகை அவிழ்ந்தன்ன பருவத்தர், நங்கையர், நம்பியர், இளைஞர், முதியர் முதலிய எல்லோரும் தத்தம் நிலைக்கேற்றவாறு ஊர்திகளிலோ, நடந்தோ ஆற்றுக்குச் செல்வர். மகளிர் வைகையில் நீராடி 'வையையென்னும் பொய்யாக் குலக்கொடி'க்கு வழிபாடுசெய்வர். ஆடல்மகளிர் ஆடல்புரிவர்; பாடல் மகளிர் பாட்டிசைப்பர்; இளைஞர் ஆற்று வெள்ளத்தில் குதித்து நீந்துவர். சிலர் மிதவைகளைக்கொண்டு அக்கரைக்கும் இக்கரைக்கும் சென்றுவந்து விளையாடுவர், ஆடவரும் மகளிரும் தம்தம் பொருள்நிலைக்கேற்றவாறு பொன், வெள்ளி செம்பு இவற்றால் செய்தமீன், இறால், நண்டு இவற்றை வையையை வாழ்த்திக்கொண்டே புதுவெள்ளத்தில் எறிவர்.

வையையின் இரண்டு கரைகளிலுமுள்ள சிற்றூர்களில் வாழும் உழவர் வெள்ளத்தைக்கண்ட மகிழ்ச்சியால் கூத்தாடித் தத்தம் வயல்களில் நீரைப்பாய்ச்சுவர். உழத்தியர் புதுவெள்ளத்தில் கண்சிவப்பேறக் குடைந்து நீராடுவர். இங்ஙனம் பாண்டிய நாட்டு மக்களுக்குச் செவிலித்தாயாக விளங்கும் வையையென்னும் எழில்பெறுநங்கை, தன்மக்கள் தன்னைவாழ்த்தலும் வழிபடுதலும் செய்யப் பூவாடைபோர்த்து அசைந்தாடி அன்ன நடை நடந்து செல்லுவாள். ❋ ❋

கலப்புத்தமிழர்

உலகத்திலுள்ள சீர்திருந்திய மொழிகளைப்பேசும் மக்கள் ஒருவரேனும் தமிழரைப்போலத் தம் மொழிகளிற் பிறமொழி எழுத்துக்களைக் கலந்து எழுதுவதில்லை. "S. L. Ilavazhganar" என்றோ "அ. ஜ. Smith" என்றோ ஆங்கிலேயர் எழுதமாட்டார். தமிழரோ இன்றும் கிரந்த எழுத்துக்களைமட்டுமன்றி ஆங்கில எழுத்துக்களையும் கலந்து எழுதும் வழக்கத்தை உடையவராயிருக்கின்றனர். "C, V, செல்லையா" என்றும் "தி. ஜ நடராஜன்" என்றும் எழுதுகின்றனர். இந்தப்பழக்கம் இன்னும் ஒழிக்கப்படாமலிருப்பதற்குப் போதிய தமிழுணர்ச்சி இன்மையே காரணமன்றோ?

பண்டிதர். கா. பொ. இரத்தினம்.

“வேழம்பர்”

தமிழகம் பலவகைக் கலைகளைத் தன்னகங் கொண்டது. பல்வகை ஆடல்களையும் பாடல்களையும் தன் செல்வமாகக் கொண்டிருந்தது: கொண்ட கலைகளைப்போற்றியது; அதனுல் தமிழகம் வளர்ந்தது தமிழரேயன்றி வடவரும் வளர்த்தனர் என்பதற்கும், வடவரின் கலை வளர்வதற்கும் தமிழகம் இடமளித்தது என்பதற்கு இலக்கியம் சான்று தருகிறது.

வடநாட்டார் ஆடுகின்ற பல்வகைக் கூத்துக்கள் நம் நாட்டிலும் இடம்பெற்றிருந்தன. அத்தகைய ஆடல்களுள் இரண்டு நம் எண்ணத்தை ஈர்க்கின்றன. அவை வேழம்பமும், நகை வேழம்பமுமாம். வேழம்பம் ஆடுபவர்க்கு வேழம்பர் என்ற பெயரும், நகை வேழம்பம் ஆடுவார்க்கு நகைவேழம்பர் என்ற பெயரும் வழங்குகின்றன.

அக்கூத்துக்கள்தாம் யாவை என்றறிவோம்.

நகை வேழம்பர் :-

இவர்க்கும் வேழம்பர்க்கும் நிறைந்த வேறுபாடுகள் உள! இவர் நகைவிளைய ஆடுகின்றவர். வடமொழியில் 'விகடர்' என்று கூறுவர். தமிழில் இவரை நகைச்சுவைக் கூத்தர் எனப்படுவர். இவர் பிறர்க்கு நகைவிளைத்துச் சோர்வு நீக்குந் திறம் பெற்றவர்.

தண்டை. ந. ஐயாசாமி. பி. ஏ.

இவர் தமிழர்க்கு அயலார். வடநாட்டைச் சேர்ந்தவர். தமிழகப் பண்பாட்டிற்கும் இவர்க்கும் எவ்வகைத் தொடர்பும் இல்லை. மன்னனை அண்டியே இவர் வாழ்ந்தனர். பல்வகை நூற்பயிற்சி உடையவராதலால், மன்னரையண்டி வாழ வாய்ப்புப் பெற்றனர்.

அரசியல் தொல்லைகளால் அயர்வுற்ற மன்னர்க்கும், அலுப்புற்ற அமைச்சர்க்கும் மகிழ்வுண்டாக்கி ஊக்கமுறச்செய்ய இவர் அரசவைகளில் வைக்கப்பெற்றனர். மன்னரையண்டி வாழ்ந்த இவர் அவரால் விரும்பப்பட்டு ஊர்க்குள் வாழ்ந்தனர்.

இவர் தமிழகத்திற்குப் பிழைக்கவே வந்தனர். ஆரிய மன்னர் தம்மிடமிருந்து தமிழ் மன்னர்க்குத் திரையாக வந்தவரும் பலர் ஆவர். இவர் சமயநூல் பலவும் பயின்றவராகவும் இருந்தனர். சமயநூல் தொண்ணூற்றாறு வகைப்படும். அனைத்திலும் இவர் தேர்ச்சிபெற்றிருந்தனர்!

இவர்க்குத் தெய்வம் பாசண்டச் சாத்தன் எனப்படுவான், இவன் மாசாத்தன் என்றும் அழைக்கப்படுவதாக நூலில் காண்கிறோம்! இவன் நகைவேழம்பராலன்றி, மற்றவராலும் தொழுது ஏத்தப்பெற்றான். இந்தப் பாசண்டச்சாத்தன் கோவில்களும் தமிழகத்தில் ஆங்காங்கு இருந்தன.

இதற்கான அடிப்படைகள் சிலப்பதிகாரத்தில் காணக் கிடைக்கின்றன!

நகைவேழம்பர் மன்னரால் திறையாகத் தரப்பட்டவர் என்ற செய்தியையும், இவரைத் திறைப்பொருளாகத் தந்தவர் ஆரியமன்னர் என்ற செய்தியினையும், இவர் ஆரியமன்னர் தம்மால் தரப்பட்டவர் ஆதலால் வடநாட்டைச் சேர்ந்தவர் என்பதையும் பின்வரும் அடிகளால் உணரலாம்.

நூற்றுவர் கன்னர் என்ற வடபுல வேந்தர், செங்குட்டுவனின், வடபாற் செலவைக் கேட்டவராக, சஞ்சயன் என்ற * பன்னனைத்திறைப் பொருள்கள் பலவற்றோடும் செங்குட்டுவன்பால் அனுப்பினர். அவ்வாறு அனுப்பப்பட்ட திறைப்பொருள்களுள்,

> "தொண்ணூற் றறுவகைப் பாசண்டத் துறை
> நண்ணிய நூற்றுவர் நகைவே ழம்பர்"
>
> [சிலப்பதிகாரம். கால்கோட் காதை-130, 131]

இருந்தனர்.

அதுமட்டுமன்று! செங்குட்டுவன் சஞ்சயனை உள்ளே அழைக்க,

> "சஞ்சயன் புகுந்து தாழ்ந்துபல வேத்தி
> ஆணையிற் புகுந்த வீரரைம்பத் திருவரொடு
> மாண்வினை யாளரை வகைபெறக் காட்டி"

நின்றான்.

> [சிலம்பு-கால்கோட்காதை 144, 146]

நகைவேழம்பர் பிறமக்களோடு மக்களாக உடன்வாழும் உரிமைபெற்றிருந்தனர். பட்டினப்பாக்கத்திலேயே அவர் உறையுள் அமைத்து வாழ்ந்தனர் என்ற செய்தியினை,

> "நகைவே ழம்பரொடு வகைதெரி யிருக்கையும்"
>
> [சிலம். இந்திரவிழா காதை. 53]

என்ற வரியால் பட்டினப்பாக்கத்துத் தெருக்களைப்பற்றிக் கூறுங்கால், இளங்கோவடிகள், குறிப்பிடுகின்றார்.

---

* *பன்னன் — தூதுசெல்பவன் — தூதன் — ஆராய்ந்து தேர்ந்து, நெருங்கிப் பல்வகையான் எடுத்துக்கூறி நலம்பேணும் தன்மையுடையவன் என்னும் பொருள்படும் தூதவன் எனும் வடசொற்கு நேரிய தமிழ்ச்சொல்லாக இதனைக் கொள்ளல் பொருத்தமுடைத்தாம் காண்க.*
(ஆ. ர்)

நகைவேழம்பர்க்குத் தெய்வம் பாசண்டச்சாத்தன் என்பதையும், அவனைத் தமிழர் வழிபட்டனர் என்பதையும் அறிவிக்க வருகின்றன பின்வரும் அடிகள்.

மாலதி மாற்றாள் மகவுக்குப் பால்தர, பால்விக்கிப் பாலகன் மாண்டுபோனதால் பல தேவரையும் வணங்கிக் கடைசியாகச் சாத்தனை யடைந்தனள் என்பதை,

"பாசண்டச் சாத்தற்குப் பாடு கிடந் தாளுக்கு"

[கனாத்திறம் உரைத்த காதை-15]

என்னும் அடியினால் அறிகின்றோம்.

பாசண்டம் என்பது தொண்ணூற்றாறுவகைச் சமயத்திறத் தருக்கக் கோவை.

மேற்கண்ட குறிப்புக்களால் நகைவேழம்பர்பற்றித் தெள்ளத் தெளிய அறிந்து கொண்டோம்.

நகைவேழம்பர் போன்றே நமக்கு முற்றிலும் மாறுபட்டவராகவும், அயலாராகவும் இருப்பவர் வேழம்பர் ஆவர். இவ் வேழம்பர்பற்றி நாம் அறிவதெவை?

வேழம்பர் :-

இன்றும் தமிழகத்தில் நிலைபெற்றுவருகின்ற கூத்து கழைக்கூத்து. மூங்கிலை நட்டு அதன்மேல் பற்பல ஆடல்கள் நிகழ்த்துபவரை நாம் பார்க்கின்றோம். இந்தக் கழைக்கூத்து ஆடுபவரே வேழம்பர் எனப்பட்டனர்.

இதனைப் பின்வருகின்ற பிங்கல நிகண்டடியினால் அறியலாம்.

"வேழம்பர் கழைக்கூத்தர்" *[102]*

வேழம்பர் நகைவேழம்பர் போன்று மன்னனையடுத்துப் பிழைப்பவரும், ஓரிடத்திலேயே நிலையாக நின்று வாழ்க்கை நடத்துபவரும் அல்லர். இவர் எப்போதும் ஊர் ஊராய்ச் சுற்றுவதையே தொழிலாய்க்கொண்டவர்.

"வருத்தவளை வேயரசர் மாமுடியின் மேலாம்
வருத்த வளையாத மூங்கில்—தரித்திரமாய்
வேழம்பர் கைப்புகுந்து மேதினியெல் லாந்திரிந்து
தாழும் அவர் தம்மடிக்கீழ்த் தான்"

என்ற நீதிவெண்பாப் பாடல், வேழம்பர் ஊர் ஊராய்ச் சுற்றித் திரிபவர் என்ற செய்தியை உறுதிப்படுத்துகின்றது.

இவ் வேழம்பர் ஆரியர் என்று எண்ணற்கிடனாகின்றது. ஆரியர் என்று இவர் அழைக்கப்படுவதே இதற்குக் காரணம்.

"இவர்கட்குப் பெயர் மட்டும் ஆரியர் என்று வழங்கப்படுகின்றதேயன்றி, உண்மையில் இவர் ஆரிய மக்களல்லர்" என்பாருமுளர்.

ஆரியர் என்பது இவ்வரைமட்டும் குறிக்கவில்லை. பெண் யானைகளை நன்கு பழக்கப்படுத்தி, அவற்றைக்கொண்டு, ஆண் யானைகளைப் பிடிக்கின்றவர்க்கும் ஆரியர் என்ற பெயர் வழங்கப் படுகின்றது. வடபுலத்திலே யானை மிகுதி! எனவே மேலுள்ள வாறு யானையைப்பிடித்துப் பழக்குபவர் வடபுல ஆரியரே!

யானையைப் பிடிக்கின்றவர்க்கும் ஆரியர் என்று பெயர் இருத்தலினாலும், கழைக்கூத்து ஆடுபவரும் அப்பெயரால் குறிக் கப்படுவராதலாலும், இருவரும் வடபுலத்தவர் என்பது உறுதிப்படு கிறது.

நகைவேழம்பர் எனப்பெறுவோர் ஆரியமன்னரால் அனுப் பப்பட்டவராவர். அவ்வாறென்றால் அதே பெயர்ப் பொருத்தத்தை யுடைய வேழம்பரும் ஏன் வடநாட்டாராக இருந்திருக்கமாட் டார்? அவர் வடநாட்டாரே!

ஆரியர் பெண்யானைகளைப் பழக்கி ஆண் யானைகளைப் பிடித் தனர் என்று அறிந்த செய்தியை,

"தாரும் தானையும் பற்றி ஆரியர்
பிடியினின்று தரூஉம் பெருங்களிறு போல" [அகம். 276]

எனவருகின்ற செய்யுளடிகளால் அறிகின்றோம்.

ஆரியரே வேழம்பர் என்று அறிந்தோம். அவர் கூத்தாடும் போது பறையொன்று முழக்கப்படும் என்பதையும் அறிகின்றோம். ஆரியராகிய வேழம்பர் ஆடுகின்ற கழைக்கூத்துப்பற்றிய செயலைக் குறுந்தொகையில் அறிகின்றோம்!

"வில்லோன் காலன கழலே தொடியோள்
மெல்லடி மேலவும் சிலம்பே நல்லோர்
யார்கொல் அளியர் தாமே **ஆரியர்**
கயிறாடு பறையிற் கால்பொரக் கலங்கி
வாகை வெண்ணெற் றொலிக்கும்
வேய்பயில் அழுவம் முன்னி யோரே!

(குறுந்தொகை. 7)

ஆரியர் கயிற்றில் ஏறி ஆடுபவர் என்பதும், அவர் அவ்வாறு ஏறி ஆடுங்கால், பறையொலியும் முழக்கப்படும் என்பதும் தெளி வாகும்!

மேற்கண்ட எடுத்துக் காட்டுக்களால் **நகைவேழம்பர்** எனப்பெறுவோர் வடநாட்டவர் என்றறிந்தோம்! அவர் பெயரொடு ஒத்த பெயர்கொண்டுள்ள வேழம்பரும் வடநாட்டு ஆரியர் என்பதுமறிந்தோம்!

ஆரியர் ஆடுவதே கழைக்கூத்து. **கழைக் கூத்து காரியக் கண்ணோடும், கருத்தோடும் ஆடப்பெறுவது. இதையொட்டியே "ஆரியர் கூத்தாடினாலும் காரியத்தில் கண்ணாயிருப்பர்" என்னும்** பழமொழி வழக்கிலுளது.

❋ ❋ ❋

உழைப்பே வேண்டும்.

சி கேசவப்பெருமாள்.

1. மெத்தப் படித்தவரும்-பொருள்
மீதிற் புரள் பவரும்
"சொத்தையன்" என்றுசொன்னார்-இவனைச்
சோம்பற் கிடமென்றனர்.

2. "சுற்றிய கந்தலைப்பார்-இவன்றன்
தோளின் சுருக்கமும் காண்!
பற்றிய தேரையைப்போல்-வயிறும்
பார்த்ததுண் டோஉணவை?

3. பள்ளிக்குச் சென்றதுண்டோ-அறிஞர்
பக்கலில் நின்றதுண்டோ?
உள்ளத்துக் கல்வியில்லை-இவன்பால்
ஊறிச் சுரப்பதுண்டோ?

4. என்று புகன்றனரே-கந்தனை
எள்ளி இகழ்ந்தனரே.
ஒன்றும் உரைக்கவில்லை-அவன்
உள்ளம் சளைக்கவில்லை;

5. தொண்டுக் கடிபணிந்தான்-உயர்ந்த
தோள்களை வாட்டுகின்றான்
பண்டைத் தமிழகத்தின்-அறஞ்சேர்
பண்பினை ஊட்டுகின்றான்.

6. "அன்புப் பெரியவரே-உலக
அன்னையின் செல்வங்களே!
நன்று புரிந்திடுவீர்-உழைப்பை
நாட்டுவீர் நாட்டிலென்றான்

7. "தாயகம் காத்திடுவீர்-உயிராய்த்
தாய்மொழி போற்றிடுவீர்
நாயிற் கடையேனின்-சொற்களை
நல்லுளங் கொள் விரென்றான்.

8. வாழற் குழைத்திடுவீர்-புழுவாய்
வாடிக் குலைந்திடுவீர்.
கூழுக் கலைந்திடுவீர்-இந்தக்
கூனல் நிலையெதற்கோ?

9. என்றுரைத் தேழையர்பால்-கந்தன்
ஏற்ற விதைவிதைத்தான்!
ஒன்றினர் மக்களெல்லாம்-உழைப்பில்
ஓங்கினர் வாழ்க்கையிலே!

அறுபருவத் திருக்கூத்து

துரை - மாணிக்கம்

நூல்முறை:

இந்நூலுள் வரும் பாக்களெல்லாம் அகவற்பாவால் நடப்பன. ஒவ்வொரு பருவத்தையும் நூறு நூறு அடிகளான் விளக்குதலினால், நூலின் மொத்த அடிகள் அறுநூறும், என்றறிக. அடிகள் இடையிடை தங்கி எழுந்து போவனவாய் அமையாது, மலையிடைச்சுரந்து மடுவிடைப் படுத்து, நிலம்பரந்தோடும் நெடுநீராறுய்ப் பெருக்கெடுத்து, இறுதியில் அலைகடல் சேரும் ஆற்றின் போக்காய், முடிவில் மையக் கருத்தொடு கலந்து மகிழ்வை விளைவிக்கின்றன.

நூலின் தொடக்கம் குளிர்மையும், இனிமையும், பசுமையும், நீர்மையும் கலந்து உலகத் துயிர்த் தோற்றங்கட்கெல்லாம் உட்கருவாய் அமைந்ததும், சான்றோரால் நூலின் முற்பகுதியில் வைத்துப் போற்றப் பெற்றதுமான மழைக் காலமாகும். ஒவ்வொரு காலத்திற்கும் தலைப்புப்பெயர்கள் தரப்பெற்றுள்ளன. இப்பெயர்கள் நூலின் கருப்பொருளை விளக்குவனவாகவும், அதன் சிறப்பைக் கூறுவனவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இனி நூலுள் நுழைவாம்.

1. கார்

காலம்: **ஆவணி - புரட்டாசி**

பாட்டின் பெயர்: உயிர்க்குயி ரூட்டும்
ஒழுகுவா னமிழ்து !

பாட்டுச் சுருக்கம்:

அரிய நீண்ட வாடைக்காற்று வீசிக்கொண்டிருக்கின்றது. முன் மாலை தொடங்கிய மழை, இரவு முழுவதும் விடாமற் பெய்துகொண்டிருக்கின்றது. பெரும் படைகள் போன்று கரிய முகில்கள் வானைச் சூழ்ந்து, ஒன்றோடொன்று முட்டி மோதலால் கடுமையான குரலுடன் இடி உருட்டுகின்றது. நலிந்தவர் முகங்கண்டு இரங்கி, அவர்க்கு வரையாது கொடுக்கும் அருள்கனிந்த கொடைச்செல்வனின் பெரும் பொருள்கள்

போல் தொடர்ந்து பெய்யும் இராமழைக்கு உலகம் நடுங்குகின்றது. பெருமழை காரணமாக நீண்ட கரைகளை உடைய ஆறுகளில் விரைந்து ஓடிய நீர், ஆற்றோரங்களில் உள்ள அடி அகன்று பருத்த பெருமரங்களை அடி பெயர்த்து வீழ்த்தி உருட்டிக்கொண்டு போகின்றது. கரையுடைத்து ஓடுகின்ற மழை வெள்ளம் அருகில் பரந்துகிடக்கும் வயல்களில் பாய்கின்றது. பெய்கின்ற மழைக்கு அஞ்சிய குரங்குக் கூட்டம் இங்குமங்கும் தாவி அலைந்துகொண்டிருக்கின்றது. தொங்குகின்ற கைகளையும், தூண்போன்ற கால்களையும் உடைய யானைக்கூட்டம், அடிக்கடி முழங்குகின்ற இடியோசைகளைக்கேட்டு அஞ்சி அவற்றோடு பொருத முற்படுகின்றன. மீறிய சினத்தால் அவ்வியானைகளின் கன்னங்களில் வெறிநீர் பொங்கிக் கொண்டிருக்கின்றது. ஒருபுறம் மரங்களிற் கட்டிய கூடுகளெல்லாம், வலியவாடைக்காற்றால் பிய்த்தெறியப்பட்டனவால்,குளிர்மிகுந்து நடுங்கி உடலொடுங்கிய குருவியினம் மரக்கிளைகளில் உள்ள புழைகளில் போய் அடங்குகின்றன. விலங்குகளெல்லாம் இரை தேடுவது முற்றும் இயலாமையினால் கடுமையான பசியையும் அடக்கிக்கொள்கின்றன. காட்டின் ஒரு பக்கலில் இடி விழுந்ததால் அங்குள்ள மரங்களெல்லாம் தீப்பற்றி எரிகின்றன. அக் கொடுந்தீயில் பெரிய மலைப்பாம்புகள் தீய்ந்து போகின்றன. ஆற்றுக்கருகில் மணலுள் மறைந்துகிடந்த தவளைகள் பொங்கியெழும் வெள்ளத்தால் மகிழ்ந்து வாயரற்றிப் பாடுகின்றன;

வானின்று வழியும் மழைநீர்க்கு மகிழ்ந்து, கானமயில்கள், தந்தந் தோகைகளை விரிக்கின்றன: அங்குள்ள புற்களின் நுனிகளிலும், புதர்களிலும் மேய்ந்துகொண்டிருந்த மின்மினிக் கூட்டங்கள்,அழகிய சிறுசிறு விளக்குகளை ஏந்தித்திரிவனபோல் காட்சியளிக்கின்றன. காளாம்பிகள் சிறுசிறு குடைகளை விரித்தவாறு ஒருகாலில் நின்றுகொண்டிருப்பன, அன்னக்குஞ்சுகள் போல் தோற்றமளிக்கின்றன; தம்தம் குறுகிய தலைகளை வெளியே நீட்டுவதும், உறுமுகின்ற இடியொலிகேட்டு அஞ்சி உள்ளே இழுத்துக்கொள்வதுமாகக் குறுமுயற்கூட்டங்கள் புழைகளில் பதுங்கியிருக்கின்றன. பின்னலும் இடியும் மாறி மாறி நிகழ்வதால் அவற்றிற்கஞ்சிய மான் கூட்டங்கள், தாம் போய்த் தங்குமிடங்களிலிருந்து வேறு வேறு இடங்களுக்குத் தாவியவண்ணமேயிருக்கின்றன.

ஆண் களிறுகள்போல் உள்ள கரிய முகில்கள், குன்றுகளின் உச்சிகளில் வந்து உலவிக்கொண்டிருக்கின்றன. முழங்குகின்ற அருவிநீர் சரிவான பாறைகளிலிருந்து பச்சைப் புல்வெளி

களில் குதித்து விளையாடுதல்போல் காட்சியளிக்கின்றது. ஆங்குக் குதித்த இடத்தில் ஏற்பட்ட நீரின் சுழற்சியில் பல குற்றுயிர்களும் சுழலுகின்றன. பெய்துகொண்டிருக்கின்ற மழைத் துளிகளை உண்டு, மகிழ்ச்சியுடன் வானம்பாடி வானில் வட்டமிடுகின்றது. இவ்வகை ஆரவாரங்கட் கிடையில் இரவு கழிந்து கொண்டே போகின்றது.

செம்மண் நிலத்தின்கண் விழுந்து கிடக்கின்ற பன்னிற மலர்கட்கிடையில் பவள நிறமுடைய தம்பலப் பூச்சிகள் மேய்ந்துகொண்டிருக்கின்றன. ஆக்களெல்லாம் ஈரம்படிந்த புற்களை அருந்தாமலிருக்கின்றன; கன்றுகளெல்லாம் ஆக்களின் மெல்லிய மடிகளின் மருங்குகளில் ஒடுங்கித் தூங்குகின்றன.

வீட்டுப் பறவைகள் தம்தம் குஞ்சுகளுடன் உடல்கூனி நடுங்கி நிற்கின்றன; ஒருபக்கலில் மென்மையான உடலை உடைய புறுக்கள் தம்முட் புணர்ந்து மகிழ்கின்றன. வீசுகின்ற வாடைக்காற்றால் வெருகு என்னும் பூனை உடல் ஒடுங்க அமர்ந்திருக்கின்றது. தூய்மையான மழைநீர் வீட்டுக் கூரைகளினின்று இழிந்து கொண்டேயிருக்கின்றது தாழங்குடைகள் தரைக்கு வந்து சேர்ந்தன. ஓலையாற் பின்னிய விசிறிகள் பரண்மீது போய் அவ்விடத்தை அடைத்துக்கொண்டன.

ஊரைச்சுற்றியுள்ள புதர்களில், காந்தல் மலர்ந்திருக்கின்றது. காக்கணம் பூத்திருக்கின்றது. உயர்ந்தோங்கி நின்ற கொன்றை மரங்களில் கொத்துக் கொத்தாகப் பூக்கள் நிறைந்திருக்கின்றன. அவை ஈரம் படிந்ததால் தரைநோக்கித் தாழ்ந்திருக்கின்றன. வேங்கை மலர்ந்திருக்கின்றது. ஓங்குயர்ந்திருக்கின்ற காயா மரங்களில் பூக்கள் நிறைந்து தூங்குகின்றன. கடம்ப மலரும், கூதளமும் மலர்ந்து மணம் வீசிக்கொண்டிருக்கின்றன. பின்னிப் பிணைந்து, பற்றி ஏறியவாறு முல்லை பூத்து விளங்குகின்றது. பீரல் பூத்துப் புதர்களைச் சூழ்ந்து படர்ந்திருக்கின்றது. ஈரமலர்களையுடைய பிரசம் எங்கணும் விளங்குகின்றது. பிடவமும், தளவமும் நிறைந்திருக்கின்றன. பித்திகம் சிவந்து நிற்கின்றது. ஈங்கைக் கொடி ஆங்கும் இங்கும் அலைந்து புரள்கின்றது.

இவ்வகையான எழில் பொருந்திய சூழல்களில் ஓடிக் கொண்டிருக்கின்ற மழைநீர், நிலங்களில் உள்ள வெடிப்புத் துளைகளில் இறங்கிக் கொண்டிருக்கின்றது. பெய்துகொண்டேயிருக்கின்ற வானம் வெண்மையான கருநிறத்தோடு, கதிரவனையும் வெளிக்குக்காட்டாமல் மறைக்கின்றது. அங்குள்ள முகில்களில் மழைநீர் நிறைந்துள்ளதால் அவைமிகவும் தாழ்ந்து உலவுகின்றன.)

நூல்

கருங்கார்ப் பெரும்படை கடுங்குரல் உருட்ட,
நறுங்கொடைச் செல்வன் நலிந்தவர்க் கீத்த,
பெரும்பொரு ளன்ன பெயல்தொட ரிரவின்
அரும்பெரும் வாடைக் கிந்நிலம் நடுங்க,
வேர்பெயர்த் தகலடி வீழ்த்தி யுருட்டி
நீர்விரைந் தோட்டும் நெடுங்கரை யாறு
வயல்தொறும் பாய, வான்மழைக் கஞ்சி
அயலயல் தாவி அலையக் குரக்கினம்,
தொங்குவாய்த் துழவித் தூண்கால் மிதித்தே
பொங்குநீர்க் களிற்றினம் வானீடு பொருத,
கூடுசீழ்த் தெறிந்த வாடைக் கொடுங்கி,
கோடுபுழை யடங்கிக் குரீஇனம் வாடப்,
பன்னுள் மாவினம் படுபசி யொடுங்க,
மின்னே றுண்ட மரந்தீ மேய,
கனலகப் பட்ட கடுஞ்சுணந் தீய,
மணலுறைந் திருந்த நுணல்வா யரற்ற,
வான மஞ்சின் வழிநீர்க் குவந்து
கான மஞ்ஞை பீலி விரிப்ப,
புன்னுனி தோறும் புதல்தொறும் மேய்ந்த
மின்மினிக் குழாஅம் மணிவிளக் கெடுப்ப,
சிறுகுடை விரித்த ஒருகா லாம்பி
குறுங்கால் அன்னக் குஞ்செண நிற்ப,
உறுமும் பேரிடி ஓசைக் கஞ்சி
குறுமுயற் கூட்டம் குறுந்தலை யிழுப்ப,
வல்வாய் முழக்கும் வழிவழி மின்னப்,
புல்வாய் நிரையம் புலம்புலந் தாவ,
பகடெனக் கொண்மூப் படைநெடுங் குன்றின்
முகடுவந் துலவ, முழவுநீ ரருவி
பாறை நழுவிப் பைம்புலங் குதிப்ப,
சூறைப் புனலுட் பல்லுயிர் சுழல,
ஊனுயிர் களிப்ப உருதுளி மாந்தி
வானம் பாடி வான்வளைந் திசைக்க,
செம்புலப் பரப்பிற் பன்மலர் சிறக்கத்
தம்பலப் பூச்சிகள் தலைதலை மேய,
ஆவினம் ஈர்ம்புல் அருந்திட மறுப்ப.

மேவிய கன்றினம் மென்மடி துஞ்ச,
குஞ்சொடு பெடையுடற் கூனி நடுங்க,
பஞ்சுடற் புறவினம் புணர்ச்சியிற் பரவ,
வீசுவல் வாடையில் வெருகுட லொடுங்க
மாசறப் பெயனீர் மனைமுது கிழிய,

தாழை மலர்க்குடை தரைவந் திறங்க,
ஓலை விசிறிகள் உயர்பரண் ஏற,
காந்தண் மலர, காக்கணம் பூப்ப,
ஏந்துபூங் கொன்றை இணர்தரை தாழ,
வேங்கை அலர, விரியத் தாழை,

ஓங்குயர் காயா ஒண்பூத் தூங்க,
கடம்பம் மணக்கக், கூதளம் நகைப்ப,
இடந்தொறும் முல்லை இவர்ந்துயர் விளங்க,
பீரல் பூத்துப் பெரும்புதர் மறைப்ப,
ஈர்ம்மலர் பிரச மெங்கணும் ஒளிர
ஆடுவண் டவிழ்க்க அரும்பவிழ் பிடவம்
நீடுமணம் பரப்ப, நெடுங்கொடித் தளவம்
பூம்புதல் மேய, பித்திகஞ் சிவப்ப,
ஈங்கை நறுங்கொடி யாங்கணும் இவர,
புலந்தொறும் புலந்தொறும் புனல்வழிந் தோடி

நிலந்துளை புக்க நெடும்பெயல் வானம்
வெண்கருப் பேறி விரிகதிர் மறைப்ப,
தண்மழைத் தாரை தாழ்முகில் ஒழுக,

(தொடரும்.)

பல்கலைக் கழகங்களிற் படித்துப் பட்டம் பெறுகின்ற மாணவர் தம்மிடம் அறிவிற்குக் குறைவில்லை. நாகரிகத்திற்குக் குறைவில்லை. உழைப்பிற்குக் குறைவில்லை; நாடு, மொழி, இனம் இவற்றின்மேல் உள்ள பற்றிற்கும் குறைவே இல்லை. ஆனால் இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருந்துகொண்டு அவரவர் வாழ்க்கையை ஒளிவிடச் செய்யும் ஒழுங்கு என்பது பலரிடம் மருந்துக்கும் இல்லாமலிருப்பது.........

ஒரே ஒரு குறை.

முத்தமிழ்த் திறம்

தமிழர், இயற்கையோடு இயைந்த இன்பம், இன்பத்தோடு இசைந்த வாழ்வு நடாத்தி வந்தனர். வாழ்க்கையோடு அமைந்த நுண்கலையும், நுண்கலைகளோடு அமைந்த வாழ்க்கையும் போற்றியவர் தமிழர். எல்லை அறியா கலைகளையும் 'கலைகளோர் அறுபத்து நான்கு' எனக்கண்டு, அறிந்து, நுகர்ந்து போற்றினர். இது, இயல் இசை நாடகமாக அமைந்து இருப்பது யாவரும் அறிந்து கருவிலே அமைந்த திருவைப்போற்றுதற்குரியது. இசையும், நாடகமும் செறிந்து வாழ்க்கையோடு அமைந்துவரல் இயற்கை அல்லவா?

இயற்றமிழில் வல்லவர் புலவர் என்றும்; இசைத்தமிழில் வல்லவர் பாணர், பாடினியர் என்றும்; நாடகத்தில் வல்லவர் கூத்தர், கூத்தியர் என்றும் அழைக்கப் பெற்றனர். குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என தமிழர் நிலத்தை ஐவகைப்படுத்தி இயற்கையோடு இசைந்த இன்பவாழ்வு நடத்தினர். அவ்வந் நிலத்திற்கும் உரிய யாழும், பண்ணும் அமைத்து இசையைப் போற்றிவந்தனர். முழவும், வெண்கலத்தால் இயன்ற தாளமும், மயிர்ப்பீலி கட்டப்பட்ட கொம்பும், யானைக்கை போன்ற நெடுவங்கியமும், குறுந்தூம்பும், குழலும், கரடிகையும், சல்லியும், ஒரு கண் மாக்கிணையும், தண்ணுமையும், சகோடயாழும், செங்கோட்டியாழும், மகரயாழும், ஆயிரம் நரம்புயாழும் ஆகிய பலவாய இசைக்கருவிகள் பண்டு இருந்தன என பண்டை இலக்கியங்கள் அறிவிக்கின்றன.

ஊசல், கந்துகவரி, வள்ளைப்பாட்டு அம்மானை போன்றவை பெண்டிர்க்கு உரியவை. குறிஞ்சி நிலப் பெண்களின் குரவைப் பாட்டும், பாலைநிலத்துப் பெண்களின் கொற்றவை வழி பாட்டுப் பாட்டும், முல்லைநிலத்துப் பெண்களின் ஆய்ச்சியர் குரவையும், மருதநிலத்துப் பெண்களின் அம்மானையும், நெய்தல் நிலத்துப் பெண்களின் வள்ளைப்பாட்டும் சிலப்பதிகாரத்தில் காணப்படும் கானல்வரிப் பாடல்களும், பரிபாடலும் தமிழிசையின் சிறப்பினை நன்குணர்த்தும் சான்றுகள் ஆகும்.

காட்டுலிங்கன்

இவ்வாறே நாடகத்திலும் தமிழர் சிறந்து விளங்கினர். வேந்தர்க்கு ஆடும் கூத்தெனவும் பொதுமக்களுக்கு ஆடும் கூத்தெனவும் இருவகைக் கூத்தை அறிகின்றோம். அவை முறையே 'வேத்தியல்' 'பொதுவியல்' என்றும் பெயர் பெற்றன. தொல்காப்பியத்தில் வள்ளிக்கூத்து முதலிய கூத்து வகைகள் கூறப்பட்டுள்ளன. குறிஞ்சி நிலத்துப் பெண்கள் ஆடிய கூத்து குன்றக் குரவை எனப்பட்டது. பாலைநிலத்துப் பெண்கள் ஆடிய கூத்து வெறியாட்டு எனப்பட்டது. முல்லை நிலத்து இடைச்சியர் ஆடிய கூத்து ஆய்ச்சியர் குரவை எனப் பட்டது.

எழுவரேனும், எண்மரேனும், ஒன்பதின்மரேனும் கைகோத்து ஆடும் கூத்து குரவைக்கூத்து எனப்பட்டது. இரண்டு கைகளை யும் முழங்கைவரையிலும் முடக்கி, விலாப்புறங்களில் ஒற்றி ஒற்றி அடித்துக்கொண்டு அசைந்து ஆடும் கூத்து துணங்கை எனப்பட்டது. (இக்கூத்து இன்றைய குறவர் ஆடும் கூத்தை ஒத்தது.) இன்னும் சிற்றூர்களில், சிறப்பாகப், பொங்கல் நாளில் மகளிர் ஒன்று கூடிக் 'கும்மி' அடித்தல் இச்சிறப்பினைத் தெள் ளிது எடுத்துக் காட்டும். இவ்வாறு தமிழர் ஆடலையும், பாடலை யும் தம்வாழ்க்கையோடு இயைத்து, இன்ப வாழ்வு கண்டனர்.

> "நாடக மகளிர்க்கு நன்கனம் வகுத்த
> ஓவியச் செந்நூல் உரைநூற் கிடைக்கையும்
> கற்றுத் துறைபோகிய பொற்றொடி நங்கை"

(மணிமேகலை, காதை 2-ல் 30—32)

எனச் சீத்தலை சாத்தனார் பூம்புகார்ப் பூங்கொடியாகிய மாதவியின் சிறப்பை ஓதுமிடத்து, நாடகத்திலும் ஓவியத்திலும் சிறந்த நூல் கள் பண்டு இருந்தன என அறிகிறோம். சிலப்பதிகார வேனிற் காதை உரையில் அடியார்க்கு நல்லார், "ஓவிய நூலுள் நிற்றல், இருத்தல், கிடத்தல், இயங்குதல் என்னும் இவற்றின் விகற்பங்கள் பலவுள. அவற்றுள், இருத்தலாவது......" என்று விரிவாகக் கூறிச் செல்லலை நோக்க பண்டு ஓவிய நூல்கள் நந்தமிழகத்தில் இருந்தன என்பது தெளிவு.

ஓவிய வல்லுநர் 'கண்ணுள் வினைஞர்' எனப்பட்டனர். 'நோக்கினார் கண்ணிடத்தே தம் தொழிலை நிறுத்துவோர்' என்று அத்தொடருக்கு உச்சிமேல் புலவர்கொள் நச்சினார்க்கினியர் பொருள் உரைத்துள்ளார். இதை;

> "எவ்வகைச் செய்தியும் உவமங் காட்டி
> நுண்ணிதின் உணர்ந்த நுழைந்த நோக்கிற்
> **கண்ணுள் வினைஞர்**"

(மதுரைக் காஞ்சி. 516—518.)

எனவரும் மதுரைக் காஞ்சி அடிகளால் அறிகிறோம்.

பொங்கல் நன்னாளில் தமிழர் தம்வீட்டைத் தூய்மைசெய்து வெள்ளை அடித்து, நெடுஞ் சுவர்களில் வண்ணக் கலவையால் தூரிகை கொண்டு ஓவியம் தீட்டுவதும்; சிறப்பாக அரிசி மாவா லும், பொதுவாகக் கேழ்வரகு மாவாலும் கோலம் அமைத்துக் கண்டுகளிப்பதும் இன்றும் நடைபெறும் நிகழ்ச்சியாகும்.

> "சுடுமண் ஓங்கிய நெடுநிலை மனைதொறும்
> மையறு படிவத்து வானவர் முதலா
> எவ்வகை உயிர்களும் உவமங் காட்டி
> வெண்சுதை விளக்கத்து வித்தகர் இயற்றிய
> கண்கவர் ஓவியம் கண்டுநிற் குநரும்"

(மணிமேகலை, காதை 3-ல் 127-131.)

எனவரும் மணிமேகலை அடிகளால் தமிழர் தம் பண்டை வழக்கை அறியலாம். ஓவிய வல்லார் தாம் புனையும் ஓவியத்தை வண்ணம் தீட்டாது மேலோட்டமாகக் கோடுகளால் இழுக்கப் பட்டதைப், 'புனையா ஓவியம்' (Sketch) என்றனர். இதை மகளிர் வரையும் கோலத்திற்கு ஒப்பிடலாம். இப்பயிற்சியே ஓவியக் கலை யின் உள்ளம் என்றால் மிகையாகாது.

சிலப்பதிகாரத்து அரங்கேற்றுக் காதையில், மாதவியின் ஆடல் அரங்கேற்றம் அழகிய மண்டபத்தில் மேற் கூரை—'ஓவிய விதானம் பலவகை ஓவியங்கள் தீட்டப்பட்டு எடுப்பாக இருந் தது என்றும்; ஆடற்கலையில் கற்றுத் துறைபோகிய மாதவி ஆட லரசி எனப்பட்டாள் என்றும்; அரங்கின் மருங்கில் இசை ஆசிரி யன், குழல் ஆசிரியன், யாழ் ஆசிரியன், முழவு ஆசிரியன் ஆகிய வர்தம் இயல்புகள் காணக்கிடைக்கின்றன என்றும் அறிகிறோம். இவ்வாறு தமிழர்தம் வாழ்க்கையோடு கலைகளை நுண்ணிதின் அமைத்து, இயற்கை அன்னையின் எழிலோடு இயைந்த இன்பம், இன்பத்தோடு இயைந்த வாழ்வு நடாத்தி வந்தனர் என்று அறிக.

புகைவண்டிகளில் போகுங் கால் உட்காருகின்ற விசிப் பலகைகளில் படுக்கையை விரித் துக்கொண்டு போவோர் வரு வோர்க்கு இடையூறாகக் கால் களை நீட்டிக்கொண்டு, கவலையற் றுப் படுத்துத் தூங்கிக் கொண்டு போவதையும். நான் கைந்து பேர் சேர்ந்துகொண்டு அண்டை அயலில் குடும்பப் பெண்கள் அமர்ந்துள்ளதையும் எண்ணாமல் பேசாதனவற்றை இரைந்து பேசிக்கொண்டு போ போவதையும், அருகில் அமர்ந் திருப்போர் முகஞ்சுளிப்பதை யும் கண்டு கவலுறாது புகை குடித்துக்கொண்டு போவதை யும் இன்றிலிருந்தாவது......

கைவிடுங்கள்

அரிய நூல்களைக் கூடப் படிப்பதற்கு 'நேரமில்லையே' என்று கூறிக் கற்க முயலாதவர் பலரை நாம் காண்கின்றோம். ஆனால் அப்படிப்பட்டவர் சிற் றுண்டிச் சாலைகளில் உண்ணு வதற்காக நெடுநேரம் கைகாயக் காய அமர்ந்து கொண்டிருப்ப தையும், வண்டிக்காகக் கால் கடுக்கக் கடுக்க நின்றுகொண் டிருப்பதையும், பூங்காக்களி லும், கடற்கரை மணல்வெளி களிலும் வெறுமனே அமர்ந்து வானைப் பார்த்துக்கொண்டிருப் பதையும்: பலவிடங்களில் பல முறை காண்கின்றோம். இப் படிப்பட்டவருக்கு ஒருசொல். நீங்கள் கற்கவேண்டிய நூல்க ளில் ஒன்றைக் கையோடு வைத் திருந்து, அத்தகைய நேரங் களில் ஒன்றிரண்டு பக்கங்களை யாவது படிக்கும் நல்ல பழக் கத்தை இன்றிலிருந்தாவது......

மேற்கொள்ளுங்கள்

"ஓவியச் சேய்"

கருவண்டு விழியி ரண்டுங்
கசிந்திடும் அன்பின் ஊற்று!
சுருண்டுருள் குழலோ நல்ல
கரும்பட்டு நூலின் கொத்து!
பெருநிலா முகமே! நெற்றி
பிறைநிலாத் துண்டம்! ஆடி
வருந்தென்றல் மேனி! இன்பம்
வழங்குசேய் மனைவி ளக்கே! 1

வானவில் வந்து சேர்ந்த!
வனப்பமை புருவப் பாங்கு.
தேன்கசி இதழ்கள் தோய்ந்த
சிறியவாய்! ஒளிச் சிரிப்பு!
வானத்து மின்னல்! கன்னம்
மாம்பழம்; வாய்ஏ லம்பூ !
'நான்பிச்சிப் பூவே' என்று
நவின்றிடும் இரண்டும் காது! 2

எட்பூவே நாசி! பற்கள்
எழில்முல்லைச் சிற்ற ரும்பு!
மட்டுறும் செந்நா! தூய
மணியுடல், குளிர்மை ஊறும்
பெட்டகம்! செதுக்காப் பாவை!
பெட்புறு புதையல்! பேசும்
ஓட்பஞ்சால் ஓவி யச்சேய்
உவப்புக்குப் புதுக்கு ருத்து! 3

குழந்தையின் கைகள் வண்ணப்
பூச்சரம்! விரல்கள் யாவும்,
செழுமைகொள் தளிர்கள்! தந்தக்
கீற்றுத்தான் நகங்கள் எல்லாம்!
கொழுவிய கால்கள் கொல்லை
வாழைவெண் சிறிய தண்டு!
தழுவிடச் சலிப்பே இல்லாத்
தமிழுரு இசைக்கு ழந்தை! 4

பொன்னனை சேயின் வாயில்
புறப்படும் பேறு பெற்ற
தென்பாங்கு மழலைச் சொற்கள்
தேன்மழை! அமிழ்த வெள்ளம்!
அன்னசொற் பொருளைக் கேட்ட
அன்னைவாய் தாம ரைப்பூ!
அவள்முகம் அணைத்துப் போர்த்த
அழகுச்சேய் ஒருபா மாலை! 5

— "தமிழன்பன்" —

நன்னெறி உவமை நலம்.

புலவர் ஆ. முகிலன்.

அறிந்துள்ள பொருளாலும், தன்மையாலும், அறியாத பொருளையும் தன்மையையும் எளிதே உணர்வித்தல் உவமை ஆகும். உவமை, பாட்டுக்கும் கருத்துக்கும் அழகு செய்வதால் இதனை அணி யென்று மொழிகின்றோம். உவமை அணியை வடநூலார் 'உபமா - அலங்காரம்' என்பர்.

உவமை எவ்வளவுக் கெவ்வளவு எளிமையும், எல்லோரும் அறிந்து காணற்கியல்வதாயும் இருக்கின்றதோ, அவ்வளவுக் கவ்வளவு கூறப்படும் கருத்தும் அதன் தன்மையும் கற்பார் உள்ளத்தே நன்கு படியும். பெரும்புலவோர் தாம் கண்ட பேருண்மைகளை விளக்க முற்படுங்கால், மக்கட்கு அத்தன் மைத்தாய உவமைகளையே கையாளுதல் இதன் பொருட்டே என்க.

அத்தகைய விழுப்பஞ் சான்ற ஒழுக்கலாற்றால் உயர்ந் தோராகிய துறை மங்கலம் சிவப்பிரகாச அடிகள் தாம் எழுதிய 'நன்னெறி' என்னும் அரிய நெறிநூலுள் கையாண்டுள்ள உவமைகளையும் அவற்றின் நலன்களையும் முறையே நுணுகி அறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஊசி நுழையும் அளவிற்கும் சிறிதாக ஒரு துளையிருக்கும் குடத்திலே பெய்யப் பட்ட நீர்தானும் அதனுள் தங்காமல் ஒழுகி விடுகின்றது. ஆனால் பெரிதான அளவில் வாய், செவி, மூக்கு முதலிய ஒன்பது துளைகளையுடைய இவ்வுடம்பில் நீரினும் மெல்லியதான காற்றாகிய உயிர் வெளியே போய் விடாமல் உடலை இயக்கிக் கொண்டிருப்பதைவிட இவ்வுலகில் வேறு வியப்பு என்ன இருக்கின்றது? என்னும் பொருள்பட

> வருந்து முயிரொன்பான் வாயி லுடம்பிற்
> பொருந்துதல் தானே புதுமை— திருந்திழாய்
> சீதநீர் பொள்ளற் சிறுகுடத்து நில்லாது!
> வீதலோ, நிற்றல் வியப்பு. (நன்னெறி 12)

என்ற கேள்வியில் எத்துணை எளிமையும் அருமையும் நின்று வியப்பை ஊட்டுகின்றது. உயிர் பற்றியும், அதன் இயக்க அருமை பற்றியும் ஆன அறிவியல் வியப்புக் கருத்தை ஓட்டைக் குடத்தையும் நீரையும் வைத்துக்கொண்டு விளக்குந் திறனை எண்ணுந்தொறும் இன்பம் உண்டாகின்றதன்றோ?

இத்தகைய உயிர் பொருந்திய மாந்தர் வாழ்க்கை நிரம்பிய இவ்வுலகம், இனிய சொற்களால் அன்றி வன்சொலால் என்றும் மகிழாதாம். எவ்வாறெனின், கடுமையாகக் காய்கின்ற கதிர்களையுடைய கதிரவன் வருகையால் பொங்காத கடல், இனிய குளிர்மையான வெண்கதிர்களையுடைய நிலவின் வருகையால் பொங்கித்துள்ளுகின்றதே அதுபோல, என்று அடிகள் காட்டும் உவமை தம் உள்ளத்தை அள்ளுகின்றதா? இல்லையா?

"அதிர் வளையாய்! பொங்கா தழற்கதிரால் தண்ணென்
கதிர் வரவால் பொங்குங் கடல்,"

(நன்னெறி 18)

இத்தகைய இனிய சொல் பேசுதலையே தம் வாழ்வாகக் கொண்டு வாழும் பெருந்தகையோர் பிறர் துன்பம் காணின் தமக்கு வந்ததுபோல் எண்ணித் தாமும் வருந்துவர். "பிணியினால் துன்புற்றுத் துடிக்கும் கை, கால் முதலிய பிற உறுப்புக்களைக் கண்டு, அந்த நோய் தனக்கு வந்ததாக எண்ணி, அழுது நீர் வடிக்கின்ற கண்ணும் அத்தகையதே" என்று அவர் காட்டுகின்ற உவமை எத்துணை அழகும் ஆழமும் பொருந்தியிருக்கிறது.

"மண்டு பிணியால் வருந்தும் பிறவுறுப்பைக்
கண்டு கலுழுமே காண்." (நன்னெறி 20)

என்பதே அவர் காட்டும் உவமை.

இத்தகைய இன்சொல்லும் அருள் நெஞ்சும் கொண்ட மேலோர், தமக்கேற்பட்ட துன்பத்தையும் பொருட்படுத்தாமல் பிறர்க்கு ஏதேனும் ஒரு சிறு துன்பம் நேரினும் அதனை உடனே சென்று களைவர். எதைப்போல் எனின்

"— திங்கள்
கறையிருளை நீக்கக் கருதா துலகில்
நிறையிருளை நீக்குமே யின்று." (நன்னெறி 10)

என்று விளக்குகின்றார்.

இவ்வாறு அவர் என்றும் அத்துன்பம் உற்றோர்க்குத் தாமே வலியச்சென்று உதவுதல் என்ன பயனும் கருதியன்று.. சுவை நிறைந்த பொருள்களைக் கையாது எடுத்துச் சென்று எவ்வாறு நாவிற்கு நயந்து நாளும் ஊட்டி உதவுகின்றதோ அவ்வாறு, அவ்வறியார் தம்மை ஒன்றும் புகழ்ந்து பேசாவிடினும் தாமே அவர்க்கு உதவுவர், என்னும் பொருள் பொதிய,

"என்றும் முகமன் இயம்பா தவர் கண்ணும்
சென்று பொருள் கொடுப்பர் தீதற்றோர்—
துன்றுசுவை
பூவிற் பொலிகுழலாய் பூங்கை புகழவோ
நாவிற் குதவும் நயந்து." (நன்னெறி 1)

என்று அடிகள் கூறும் உவமை நலம் எத்துணை இன்பம் பயப்பதாகின்றது. நாளும் நாம் நடைமுறையில் காண்கின்ற — செய்கின்ற இந்நிகழ்ச்சி அடிகளின் அறிவுப் பட்டையில் தீட்டப்பெற்று எத்துணை ஒளிவிட்டு விளங்குகின்றது என்பதை மகிழாதாருண்டோ?

ஏழையர்பால் இரக்கமுற்று அவர்க்குத் தாமேசென்று பலவகையால் உதவும் தகைசால் பெரியோர் அவர்க்குவரும் துயரையும், தீமைகளையும் தாமே முன்னின்று தாங்கிக்கொள்வர் என்று விளக்க ஆசிரியர், மெய்யைச்சென்று தாக்கும் கோலின் அடிகளைக் கைபோய் எவ்வாறு தாம் முன்னின்று தாங்கிக் கொள்கின்றதோ அவ்வாறு பொறுத்துக்கொள்வர் என்று கூறுகின்ற உவமை நலத்திற்கும் விஞ்சிய திறமொன்றுண்டோ?

மெய்சென்று தாக்கும் வியன்கோ லடிதன்மேற்
கைசென்று தாங்கும் கடிது (நன்னெறி 31)

என்பதை ஆழ்ந்து எண்ணி மகிழ்ந்து பார்மின்.

இத்தகைய அருளொழுக்கும் இன்சொல்லும் பிறர்க்குற்ற நோய் நோன்றலும் வல்ல பெரியோரும் தாம் தக்காருக்கே யன்றித் தகார்க்கு உதவார்.

"—எக்காலும்
நெல்லுக் கிறைப்பதே நீரன்றிக் காட்டுமுளி
புல்லுக் கிறைப்பரோ போய்" (நன்னெறி 36)

என்று உவமைகாட்டி உணர்த்துவிக்கும் சிறப்பினை என்னென்று மொழிவது?

இத்தகைய விழுமிய கற்றோரும் தாம் கற்றவாறு நிற்றல் செய்யாராயின் அவர்கற்ற நூற்கண் என்ன பயனை உடையது என்று விளக்குவார், பெருத்த வலித்த கதவொன்றினைச் செய்து தாழ் ஒன்றினைச் செய்து பொருத்தாவிடில் பயனில்லாமைபோல அவர் கற்ற நூற்களும் பயனற்றன என்று அவர் கூறும் அறிவாற்றலை எண்ணுந்தோறும் வியக்கின்றோமா அல்லமா?

"காழொன் றுயர்திண் கதவு வலியுடைத்தோ
தாழொன் றிலதாயிற் றுன்" (நன்னெறி 31)

என்று எழுப்புகின்ற வினு எத்துணையளவு நம் நெஞ்சைச் சாடுகின்றது?

இவ்வாறு கற்கவேண்டிய நூல்களைக் கசடறக் கற்று, அக் கல்வியொழுங்கிலே நின்ற பெரியோர் நடத்தும் இல்லறம் நல்லறமாக விளங்கும். அன்பும் அறனும் உடையதாக அமைத்துப் பண்பும் பயனும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்வர். பண்புநலனும் அறிவுப்புலனும் பெற்ற நல்லோர் வாழ்க்கையை எல்லோரும் போற்றுவர். அன்றில் பறவையென ஒன்றிய உள்ளத்தோடு வாழ்விலும் தாழ்விலும் பங்கெடுத்து வாழ்வார் என்பதை விளக்கவந்தவர், கண்கள் இரண்டும் ஒரு பொருளையே மாறுபாடின்றி நோக்கும் அன்றே? அது போல காதன்மனையாளும் காதலனும் மாறின்றித் தீது, இல்லாத ஒரு கருமத்தைச் செய்வார் என்று கண்ணின் மாறில்லாத நோக்கை உவமையாகக் காட்டுவது எத்துணை மனமகிழ்வை அளிக்கிறது பாருங்கள்.

"— நோக்குமால்
கண்ணிரண்டு மொன்றையே காண்" (நன்னெறி 6)

இத்தகைய இல்லற வாழ்வை எடுத்துக்காட்டிய அடிகள், வாய்மையும் தூய்மையும் கொண்டவர் என்றுமே பழிக்கு அஞ்சுவர். தினைத்துணைப் பழி தம்மிடம் நெருங்கி வந்தாலும் பனைத்துணையாகக்கொண்டு அஞ்சுவர். ஆனால் தீயவர் அதனைக் கண்டு அஞ்சமாட்டார். பண்படாத உள்ளமும், தெளிவில்லாத செயலும் கொண்டு ஒழுக்கத்தைக் காணுத பித்தர் பழிக்கு அஞ்சுவரோ? அஞ்சார், எவ்வாறெனின், பார்வையே சிறிதுமில்லாத குருடர் இருள்சூழ்ந்த நேரம் என்று அஞ்சுவர்? பார்வை உடையவர் இருளைக் கண்டு அஞ்சுவரேயன்றி மறை குருட்டுக் கண்படைத்தோர் அஞ்சமாட்டாமையை,

"அறிவுடையா ரன்றி யதுபெறுர் தம்பாற்
செறிபழியை யஞ்சார் சிறிதும்—பிறைநுதால்!
வண்ணஞ்செய் வாள்விழியே யன்றி மறைகுருட்டுக்
கண்ணஞ்சு மோவிருளைக் கண்டு" (நன்னெறி 34)

என்று உவமையைக்கூறி நயம்பட மொழியும்திறனை வியவாதார் யார்?

அத்தகைய பழியஞ்சாத இழுக்கம் விளைவிக்கும் தீயோரை விட்டு ஒழுக்கமுடையோர் நட்பே மேலானது. அத்தகையவர் முகநட்பை வெறுப்பர். அகநட்பை வளர்ப்பர். அறிவுடையார் நட்ப்பு பிறை நிலவு நாள்தோறும் நிறையும் தன்மைத்தா

யும், பேதையர் நட்புநிறைந்த நிலவுகுறையும் தன்மையுமன்றோ இருக்கும்? நல்ல ஒருவர் பண்பையும், குடிமையையும் தெரிந்த மாந்தர் எவ்வாறு பழகுதல் வேண்டும்?

நெல்லின் உமியானது சிறிது பிரிந்து முன்போலச் சேர்ந்த போதிலும் முளைப்பதற்குரிய வலிமை தோன்றுமா? கெட்டுத்தானே விடும்? அதுபோல நீக்கமில்லாத இருவர் மாறுபட்டக் கருத்துடன் பிரிந்து மீண்டும் ஒன்றுசேர்ந்தால் அந்நட்பு நொய்மை நட்பாகும். இக்கருத்தை,

"நீக்க மறுமிருவர் நீங்கிப் புணர்ந்தாலும்
நோக்கி னவர்பெருமை நொய்தாகும்—பூக்குழலாய்
நெல்லி னுமிசிறிது நீங்கிப் பழமைபோற்
புல்லினுந் திண்மை நிலை போம்" (நன்னெறி 5)

என்று பிரியா இருவர் பிரிந்துகூடும் பெற்றிக்கு நெல்லுமியை உவமையாகக் கூறும் திறனை என்னென்பது?

இங்ஙனம் நட்பின் திறத்தினையும், அதன் தன்மையினையும் கூறி, அவரிடம் எத்துணை உறுதிப்பாட்டுடன் பிறர் நடக்க வேண்டுமென்றும், பிறரால் அவர் கேடுறுவதில்லை என்றும் விளக்குகின்றார். எவ்வாறெனின் சுழற்காற்றின் வலிமையால், சிறிய புன்மைத் துரும்பை எடுத்துச் சுழற்றுமேயல்லாது, கற்றூணைச் சுழலச் செய்யுமோ? முடியாது அல்லவா? அதைப்போல ஒருமையுள் ஐம்புலனும் ஆமையைப்போல அடக்க வல்ல உண்மையும் திண்மையும் படைத்த புலமை மிக்கோரை எந்த தீவினையும் தாக்க ஒல்லுமோ? அவ்வாறு தாக்கவேண்டுமாயின் அஃநிகழ்ச்சி புல்லியர்பால் அன்றோ நிகழும்? என்பதை,

"— துப்பிற்
சுழற்றுங்கொல் கற்றூணைச் சூறை வளிபோய்ச்
சுழற்றுஞ் சிறுபுன் றுரும்பு" (நன்னெறி 11)

என்ற உவமையால் விளக்குகின்றார்.

எனவே, இதுகாறும் கூறிய உவமையின் வழியாக, நன்னெறியினை அமைத்து வாழ்வியல் முறைகளையும், பண்பாட்டு நிறைவுகளையும், ஒழுக்கச் செறிவுகளையும் கொண்டு தோன்றிற் புகழொடு தோன்ற வேண்டுமென்று நாற்பது வெண்பாக்களில் நமக்கு அறிவூட்டுகின்றார். அடிகள் உவமை கூறும் திறத்தின் முறையால், அரிய திறத்தையும் எளிதாக ஆழமாகக் கற்பார் உள்ளத்தே பசுமரத்தாணியெனப் பதியவைக்கின்றார். அவர் கூறும் நன்னெறி நலங்களைக் கற்பாரும் கேட்பாரும், கைக்கொண்டொழுகி செம்மையான தூய வாழ்வை எய்த விழைவாராக.

குழந்தைகள் பக்கம்

எப்படி?

மிகவும் சிறிய கல்லையே
மிதக்க வைப்ப தெப்படி ?
மிகவும் பெரிய கப்பலோ
மிதந்து செல்வ தெப்படி ?

ஈனத் துரும்பை வானிலே
எடுத்து வீசப் பறக்குமோ?
வானக் கப்பல் தரையிலே
விழாது, பறப்ப தெப்படி ?

சிறிது தொலைவில் நின்றவன்
சொல்லும் சொற்கள் கேட்குமோ ?
ஒருவன் பேசும் ஒலியினை
உலகம் கேட்ப தெப்படி ?

சொன்ன பாட்டை முழுவதும்
திருப்பிச் சொல்ல முடியுமோ ?
பண்ணும் இசையும் தட்டிலே
பதித்து வைப்ப தெப்படி ?

இரவும் பகலும் அறிஞர்தாம்
எண்ணிக் கண்டு பிடித்தனர்!
இரவும் பகலும் படிக்கிறோம்;
என்ன கண்டு பிடிக்கிறோம்?



வீடு.

குடி இருக்க வீடு
கூரை மேலே ஓடு!

படிப்ப தற்கோர் அறை;
படுத்துத் தூங்க ஒன்று!

சமையல் செய்ய ஒன்று;
தட்டு முட்டுக் கொன்று!

குளிப்ப தற்கோர் அறை;
கூடிப் பேச முற்றம்!

தூய்மைக் காற்று வீசும்,
தோட்டம் ஒன்றும் உண்டு!

நோய்கள் வந்த தில்லை;
நொடிகள் வந்த தில்லை.!

பாடல்கள் இரண்டும் துரை. மாணிக்கம் எழுதிய "பள்ளிப் பறவைகள்" என்ற தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்டன.

ஓவியக் கலை

[ஓவிய வல்லுநர் ஆச்சாரியா நந்தலால்போசு அவர் எழுதிய நூற்சுருக்கம்.]

கலைத்திறம்

மாந்தன் இன்பம் அடைவதற்கும் அறிவை வளர்ப்பதற்கும் இதுவரையிலும் கண்டுபிடித்திருக்கும் கருவிகளுள் முதலிடம் பெறுவது மொழி. கருத்தை வெளியிடும் தனிமுறை ஒன்று மொழிக்கு இருப்பதுபோல் ஓவியம், இசை, ஆடல் முதலிய கலைகளுக்கும் உணர்ச்சியை வெளிப்படுத்தும் தனிமுறை உண்டு. கண் செய்யும் வேலையைக் காதுகளால் எப்படிச் செய்ய முடிவதில்லையோ அப்படியே ஓவியம் கல்தச்சு, ஆடல், இசை முதலியவற்றின் நுண்கலை உணர்வை வெறும் ஏட்டுப் படிப்பால் மட்டும் பெறமுடியாது,

கல்வியின் நோக்கம் மாந்தனின் முழுவளர்ச்சியெனக் கொள்வோமானால் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும், மற்றப் பாடங்களுக்குக் கொடுக்கப்படும் இடமும் பெருமையும் கலைப் பயிற்சிக்கும் கொடுக்கப்படல் வேண்டும். கல்வியுலகில் நாட்டு மக்களின் நாகரிகம் எவ்வளவு விரைவாக வளர்ச்சி அடைவது போல் தோன்றுகிறதோ, அவ்வளவிற்குக் கலையுணர்வின் நிலை நாளுக்கு நாள் துயரத்தை வளர்த்துக்கொண்டே போகிறது.

அழகை நுகரும் ஆற்றல் இன்மையால், மாந்தர் கலை உணர்வில் மட்டுமில்லாமல் அவர்தம் உள்ளம், உடல் நலன்களிலும் கூட இழப்படைகின்றனர். கலையுணர்வு இன்மையினால் தங்கள் வீட்டு முற்றங்களில் குப்பையைக் குவித்துவைப்பாரும், உடலழுக்கைத் தூய்மை செய்யாதவரும், கண்ட இடங்களில் எச்சிலைத் துப்புவாரும், தந்தம் உடல் நலத்திற்கு மட்டுமன்றி, மக்கள் நலத்திற்கும் தீமை விளைவிக்கின்றனர். நம்மில் ஒரு சாரார் ஓவியத்தைப் பொழுதுபோக்கும் செல்வர்க்கே உரியது எனக் கருதி அதைத் தம் அன்றாட வாழ்க்கையினின்றும், அப்புறப் படுத்தி வைக்கின்றனர். **அழகு அல்லது பண்பு இவைதான் ஓவியத்தின் உயிர் என்பதை அவர் மறந்து செல்வத்தின் அளவினால் கலையை எடைபோடுகின்றனர்-**

கலைப்பயன்

இன்னும் ஒருசாரார் ஓவியப்பயிற்சியால் வயிறு நிறையுமா என்று கேட்கின்றனர். இலக்கியப்பணி ஒன்று தாம் இன்புறுவதற்கும், அறிவு பெறுவதற்கும், மற்றொன்று பொருளீட்டுவதற்

கும் பயன்படுவதுபோல் கலைப்பணியும் பயன்படுகின்றது. மகிழ்வை உண்டாக்குவதற்கு மட்டும் ஆன கலை நுண்கலை என்றும், மகிழ்வோடு பொருளீட்டுதற்குப் பயன்படும்கலை தொழிற் கலை என்றும் பெயர்பெறும். உள்ளத்திற்கு இன்பமும்; வாழ்க்கைக்கு வருவாயும் தருகின்ற ஓவியம், கல்தச்சு முதலிய கலைகளைப் பயனற்றவை என்று புறக்கணித்தல் மக்கட் கூட்டத்திற்குப் பெருத்த இழப்பாகும்.

ஒரு கலைப்பொருளை ஒருமுறைக் கண்ணுறல்பார்ப்பதாலும் பார்த்துச் சுவைப்பதாலும், விளையக்கூடிய மனவெழுச்சியும், அறிவுவளர்ச்சியும் நூறு சொற்பொழிவுகளைக் கேட்டாலும் உண்டாகாது. அழகைக் கண்களும், மனமும் இளம் பருவத்திலிருந்தே பார்த்தும் மகிழவும் பழக்கமடைவதால், பின்னர் கலையுணர்வு மிகப்பெற்று அறிவாற்றல் வளர்வதோடு பண்பும் வளர்ந்துவரும். ஆதலால் பருவக்கால மலர்கள், காய்கனிகள், சோலைமலர்ச்சி, நீர்ப்பெருக்கு முதலிய அழகிய கலைக்காட்சிகளில், குழந்தைகளை இளமையிலிருந்தே ஈடுபடுத்துவது நல்லது.

கலைஞன்

ஒரு சீனத்து ஓவியக்காரர், "தெய்வ உருவத்திற்கும், புல்லின் தோற்றத்திற்கும், உண்மையான ஓவியன் வேறுபாடு காண்பதில்லை. அவையிரண்டும் அவன் உள்ளத்தில் ஒரே, வகையான கிளர்ச்சியை உண்டு பண்ணக் கூடியன" என்று சொல்லுகிறார். மன ஆற்றல் படைத்த ஒருதுறவியின் போக்கும் உண்மையான ஒரு கலைஞனின் போக்கும் ஒன்றே என்பதை அறிந்துகொள்ளல் வேண்டும். இருவருக்கும் வேறு வேறு வாழ்க்கை முறைகள் அமைந்திருந்தாலும், முடிவில் இருவரும் வேண்டி நிற்பது உள்ளத்தின் பெருமகிழ்ச்சியேயாம். துறவிக்கு வழிபாடுகளும் நோன்பு முறைகளும் செயல்முறைகளாக நிற்குமாயின், உண்மையான கலைஞனுக்குக் கலைப்பணியே தாம்பற்றிச் செல்லக்கூடிய உயர்ந்த செயல் முறையாம்.

உலகில் எவ்வாறு இன்பமும் துன்பமும், தூய்மையும், தூய்மையின்மையும், இருளும். ஒளியும், மருந்தும் நஞ்சும். மணமும் தீநாற்றமும்; பசுமையும் கருமையும், வளப்பமும் வறட்சியும், பொய்மையும் மெய்மையும்; ஒழுக்கமும் ஒழுக்க மின்மையும், பின்னிப் பிணைந்து கிடக்கின்றனவோ அவ்வாறே, ஓர் உண்மையான ஓவியன் உள்ளத்தில் மக்கட்குத் தேவையான உணர்வும், தேவையற்ற தீய உணர்வும், எழுச்சியும் தாழ்ச்சியும், நல்லொழுங்கும் தீயொழுங்கும், வேறுபாடின்றிப் பிணைந்து கிடக்கின்றன; மக்கட்கு நன்மை பயப்பதையும் தீமை பயப்பதையும் ஓர் ஓவியக் கலைஞன் பாகுபாடின்றி எண்ணிச் சுவைக்கின்றான். ஒரு கலைஞனின் உள்ளம் வெவ்வேறு பொழுதுகளில் வெவ்வேறு உணர்ச்சிகளினால் உந்தப்படுகிறது. பொருளின் பருமைக்கும் பெருமைக்கும் அன்றித் தோற்றம் ஒன்றிற்கே அவன் அடிமைப் படுகிறான்.

ஓவியக்கலை

ஓவியம் மூன்று வகைப்படும்: அவை (i) உள்ளது வரைதல் (Imitative) (ii) உள்ளியது வரைதல் (Suggestive) (iii) ஒலியம் (Rhythamic) என்பனவாம். இவை வடமொழியில் முறையே, அநுகாரகம், வியஞ்சகம், சாந்தசிகம் எனப்பெறும்.

கண்ணால் காண்பதை அவ்வாறே உண்மையோ என மயங்குமாறு வரைதல் உள்ளது வரைதலாம். கண்ணால் மட்டுமன்றி உள்ளத்தாலும் காணும்படி எண்ணி மன உணர்வில் ஈடுபட்டு, உள்ள பொருளைக் குறுக்கியும், பெருக்கியும் உண்மைப் பொருளுக்கு வேறுபாடு காணும் முறையில் வரைதல் உள்ளியது வரைதலாம்.

ஒலியம் என்பது உயிரோட்டக் கோட்டில் நின்று வெளியுருவை வேறுபாடு தோன்ற வரைவதாம்.

ஓவியமும் உடலமைப்பும்:

மேல்நாட்டு ஓவியத்துறையில் உடலமைப்பறிவு என்பது உடம்பினை யறுத்து அதன் ஒவ்வொரு கூறினையும் பற்றித்தெரிந்து கொள்ளும் அறிவாகும். ஆனால் உடற்கட்டையும் அதன் வகை வகையான இயக்க வளைவு நெளிவுகளையும் பொருளாக வைத்து உடலின் அமைப்பைத் தெரிந்துகொள்ளும் அறிவையே கீழ்நாட்டுக் கலைவிரும்பும். அவர்க்கும் நமக்கும் உள்ள வேறுபாடெல்லாம் கற்கும் முறையிலும், பயன் படுத்தும் முறையிலுந்தான். பெரும்பாலும், மேல்நாட்டு ஓவியக் கலைஞர் முழு உடலின் வெளிக்கோட்டையும், உறுப்புக்களின் அமைப்புக்களையும், தசைகளின் வளைவு நெளிவுகளையும் அவற்றின் தொழில்களையும் நுணிகி அணுகுகின்றனர். நம்நாட்டு ஓவியக் கலைஞரோ, ஓவியத்தில் உயிர்ப்பையே மிகுதியாக விரும்பி உள்ளக்கற்பனையையே வடிக்கின்றனர். அதனால் மேல்நாட்டுக் கலைஞரின் ஓவியங்கள் பொருள்களின் மாதிரிப் படிகளாக இருக்கும். இவ்வாறு உடல் அமைப்பு இயல்பை நன்கு கற்று விரைந்து பழகுவதால் மேலும் அவ்வாறு வரைகின்ற திறமைமிகுந்தாலும், உள்ளப்பயிற்சியும், கற்பனை வளமையும் சுருங்கி விரைவில் கற்பனை ஆற்றல் தேய்ந்தொழியும். ஓவியர் ஓவியம், கல்லுரு முதலியவற்றைக் கற்பனை செய்யத் தொடங்கிப் பொருளின் வெளித்தோற்ற வடிவத்தோடு உள்ளத்தின் நுண்ணுணர்ச்சியைக் கலந்து, அதன் உருவத்தில் ஒருமாற்றத்தை விளைவிக்கின்றனர்.

உள்ளப்படிவம்

உயிருள்ள உருவத்தையோ போலியையோ முன்னே நிறுத்திப் படம் வரையும் வழக்கம் கீழ்நாட்டு ஓவியக்கலைஞர்கட்கு

இல்லாததால் தனிஒரு வழியைக் கடைப்பிடிக்கின்றனர். எடுத்துக்காட்டாகக், கண்ணின் வடிவத்தை நினைவில் வைக்கத் தாமரைப்பூவின் இதழ்களின் இனிய உருவை உள்ளத்தில் நிறுத்திக் கொள்கின்றனர். தாமரையிதழின் இனிய வடிவமும் உள்ளக்கவர்ச்சியும் விரைவில் நினைவில்பதியும். வெறும் வழக்கத்தையே மேற்கொண்டு ஓவியம் வரைந்தால் அவ்வோவியக்கலை நாளடைவில் உயிரற்றக் குருட்டு நெறியாகிவிடும். இவ்வாறன்றி இயற்கையில் உள்ளதை அவ்வாறே வரைவதாலும், கலைதோன்றி வளரமுடியாது. உருவொற்றி (Photo) போல் இயற்கைக் தோற்றம் உள்ள ஓவியத்தில் ஓவியக் கலைஞரின் தனித்திறமையின் சிறப்பு ஒன்றும் புலப்படாது. திறமைபெற்ற கலைஞர் இயற்கையைக் கூர்ந்துநோக்கி அதன்பால் தன் உள்ளத்திற்கேற்ற வடிவங்களைக் கண்டுபிடித்து மகிழ்வர். எந்த உண்மையான ஓவியரிடமாவது போய் "உம்முடைய ஓவியம் அல்லது நீர் செதுக்கிய உருவம் ஒருவரின் தோற்றத்தைப்போல் தோன்றுகிறது" என்றோ "உம் ஓவியம் உருவொற்றியில் (Photo) பிடித்த படத்தைப்போல இருக்கிறது," என்றோ சொன்னால் அவர் மிகவும் வருத்தப்படுவார். அதுமட்டுமன்றி "இல்லவே இல்லை; இது என்படைப்பு, இது என்னால் உண்டாக்கப்பட்ட பொருளே" என்றும் கூறுவர்.

கலையறிவு வேறுபாடு

ஒவ்வொரு நாட்டுமக்களுக்கும் ஒவ்வொரு பொருளின் வடிவம் பிடித்தமாய் இருக்கும். அவ்வடிவங்கள் அவ்வந்நாட்டு மனவளர்ச்சிக்கும் பண்புக்கும் காரணமாய் இருக்கின்றன. எடுத்துக்காட்டாகப் பாரசீகக் கலையில் மாதுளம்பூவும் கனியும், சீனக் கலையில் ஒருவகை அரிமாவும், சப்பானியக்கலையில் செவ்வந்திமலரும், எகிப்துக்கலையில் தாமரையும், கிரேக்கக்கலையில் ஒலிவ மரமும், உரோமானியக்கலையில் கொடிமுந்திரியின் இலையும், பழக்குலையும் தலையாய இடம்பெற்றிருக்கின்றன. நம்நாட்டுக்கலையில் தாமரைப்பூ மிகவும் உயரிய இடத்தைப் பெற்றிருக்கிறது.

இந்நாட்டில் தாமரை எங்கும் ஏராளமாய் மலர்கிறது. ஒரே சீராக அடுக்கப்பட்டுள்ள இதன் இதழ்களில் ஒருங்கேகுவிந்த இனிமையான முழு அழகு நம் முன்னோர்தம்மின் உள்ளத்தைக் கவர்ந்திருக்கலாம். இந்தியக்கலையில் தாமரை வடிவைப் பலவகையில் பயன்படுத்தியிருக்கின்றனர்.

ஓவியர் பண்பியல்புகள்

ஓவியர் எப்பொருளையும் முழு உணர்வோடு நோக்குகின்றனர். ஒரு பொருளோடு தம்மை ஒன்றுபடுத்தியும், அப்பொருளிலிருந்து தம்மை வேறுபடுத்தியும் பார்க்கும் இருதிறம் பெற்றவ

ருவர். அவர் பொருள்களை அவற்றின்கண் பண்புகளோடு நோக்குகின்றனர். கலையுணர்வு வாய்க்கப்பெருத மக்கள் பொருள்களை பயனளவிலேயே பார்க்கின்றனர். பண்புகளின்மேல் நாட்டம் செலுத்துவதில்லை. ஓவியரை முதன்முதலில் கவர்வது ஒருபொருளின் புறத்தோற்றமே. பின்னரே அப் புறத்தோற்றத்தின் வழியாய் அப்பொருளின் பண்பியல்புகளை நுணுகி உணர்கின்றனர்.

ஓவிய அறிவு, திறமை, பயன் ஆகியவற்றிற்கு வழிமுறையும், கலைமரபின் அறிவும் ஆராய்ச்சியும் இன்றியமையாதவை. கூர்ந்த பயிற்சியாலேயே ஒருவர் இயற்கையின் அடிப்படை ஒழுங்குமுறைகளையும், பண்பியல் முறைகளையும், அறியும் வன்மை பெறுகின்ருர்.

ஓவிய உயிர்க்கொள்கை

பொதுவாக ஓவியம் என்பது கற்பனை. கோடு, நிறம், வடிவம் இவற்றைக்கொண்டு, நுகரும் சுவையுணர்வைப் பிறர் அறிய வெளியிடுவதே ஓவியக்கலை. பிறர் உள்ளத்திலும் அந்தச்சுவை உணர்வு எழுமானல் அதுவே அக்கலை பெற்ற பயன். ஓவியரின் ஆழ்ந்த எண்ணத்தின் முடிவே ஓவியமாகிறது. சிலபொழுது நாம் கண்டு விலகிப்போகும் ஒருமரம் ஓர் ஓவியரின் கைவண்ணத்தில், உருவாகுமானல், அதன் மறைவான வனப்பு வெளிப்பட்டு நம்மை ஈர்க்கிறது. ஓவியத்தில் இயற்கைமரத்தின் படி அப்படியே தோன்றியிருக்குமானல் நம் முள்ளத்தை அது கவருமா? ஆதலின் ஓவியர் அதில் ஏதோ ஓர் உருவ மாறுதலை நிகழ்த்தியிருக்கின்ருர். அதுவே நம்மை ஈர்க்கிறது.

ஓவியக்கண்

ஓவியங்களை குழந்தைகளின் கண்கொண்டு பார்த்தல்வேண்டும். பார்ப்பதற்கு முன்பே உள்ளத்தின் வழக்கமான எண்ணங்களாலோ முடிவுகட்டினக் கருத்துக்களாலோ கட்டுப்படுத்தாமல் பார்க்கவேண்டும். ஆராய்ச்சிக் கண்கொண்டு ஓவியத்தைத் தெரிந்துகொள்ளமுடியாது.

சீனர் நிலக்காட்சி ஓவியத்தைக் கையாண்டு மன ஒருமைப்பாடு அடைந்திருக்கின்றனர். ஐரோப்பியர் இயற்கையை ஒத்த தோற்றம் வரைவதில் தேர்ச்சிப் பெற்றிருக்கின்றனர்.

ஓவியம் வரைவோர் அதன்மேல் விருப்பம் வையாவிடில் எவ்விதப் பயனும் அடையமாட்டார் விருப்பத்தோடு பயிற்சியில் பொறுமையும்வேண்டும். நாளும் விடாத பயிற்சி உண்மை ஓவியருக்கு மிகவும் தேவை. ஓவியருக்கு உலகில் உள்ள எல்லாப் பொருள்களும் நண்பரே. மரத்தைக்கண்டும், கதவைக்கண்டும் அவர் விரும்பி நட்பாடத் தொடங்குகிருர். (தொடரும்)

தென்மொழி

(6-ஆம் பக்கத்தொடர்ச்சி)

இவ்வகைக்குச் சட்டதிட்டங்களையும் ஒருவாறு திருத்தப்பெறுதல் வேண்டும். பெண்குற்றவாளிகளைச் சிறையில் அடைப்பதை விலக்கலாம். அவர்க்குச் சிறைவாழ்வு தராமல், அவர்செய்த குற்றங்களின் தன்மைகட்கேற்பப் படித்தவராயின் இளங்குற்றவாளிகளின் பாதுகாவலராகவும், ஆசிரியையாகவும் பாதுகாப்போடு வைத்திருத்தலும், படியாதவராயின், காப்பு மனை, மகளிர்விடுதி முதலியவற்றில் விடுத்துப் பண்பாடுகளையும் ஒழுக்க முறைகளையும் கற்பித்து அவரைப் பல கைத்தொழில்களிலும் ஈடுபடுத்தலும் அவரைத் திருத்தப் பயன்படும் ஓரிரு முறைகளாம்.

பெண் குற்றவாளிகளைத் திருத்துதற்கும், சிறுவரைப் பேணுதற்குமே அவர் பயன்படுத்தப்பெறுவர் என்றால், அவர்க்கு மார்பு அளவும், உயர அளவும், எடையளவும் எதற்கு? ஆக நம் அரசியலார் கொண்ட கொள்கையில் ஒரு சில மாற்றங்களைச் செய்துகொள்ளல் வேண்டும்.

பெண் குற்றவாளிகட்கும் இளங் குற்றவாளிகட்கும் இவர் காப்புத்தாய்களாக — செவிலித்தாயராக — காவற் பெண்டிராகவே விளங்க வேண்டுமென்பதே நம் விருப்பம். இம்முறையில் இவரைப் பயன்படுத்துதற்கு இவர்க்கென தனிக் காவல் இல்லமும் நடைமுறையும் வேண்டும். இவர் பெண்மைநலங் கெடாதவாறு இவர்க்குப் பணிகளை வகுத்துக் கொடுக்கவேண்டும். ஆண் ஊர்காவலரையே நாட்டுமக்களின் நண்பராக எண்ணுகின்ற அளவிற்கு அவர் கொடுமை குறைக்கப்படவேண்டியிருக்க, இப்பெண் காவலர்க்குத் துப்பாக்கிப் பயிற்சியும், காலை மாலை இராணுவ உடற்பயிற்சியும் தேவையில்லை. எளிமையும், தூய்மையும், பார்க்கும் போதே நல்ல எண்ணங்களைத் தூண்டும் முறையில் உள்ள உடைகளையே இவர்க்குத் தரல் வேண்டும். வெளிப் பழக்கவழக்கங்களில் இவர் ஈடுபாடு குறைதல் வேண்டும். பெண் குற்றவாளிகளை ஓர் ஊரிலிருந்து மற்றோர் ஊருக்குக் கொண்டுபோவது தேவையானால், உடன்போகும் ஆண்காவலர் இருவர் மூவரில், இக்காவற் பெண்டும் ஒருவராக இருக்கலாம். மேலும் இக்காவற் பெண்களைத் தெரிந்தெடுக்கும் முறையில், உடல் அளவுகளை விட உள்ளப்பான்மையையே பெரிதும் ஆராய்ந்து தேர வேண்டும்.

இவ்வாறன்றி, இவர்க்கென ஒரு காவலகத்தை அமைப்பதும், அவர்க்கும் மற்றவர்போல் வேலை முறைகளை வகுப்பதும் தாய்மைக்குலத்தை அடியோடு அழிக்கத்திட்டமிடும் அறியாமையாகும். பெண்டிர் முன்னேற்றம் என்று தவளையிரைச்

சல் போடுவார்க்கு நாம் ஒன்றுகூற விரும்புகின்றோம். பெண்கள் பெண்மையின் விளைநிலமாக இருத்தல் வேண்டும். அங்கு அன்பும், இல்லறப் பாங்கும், தாய்மையும் மணத்தல் வேண்டும். அதுவன்றிப் பெண்மை, ஆண்மைபோல் இயங்குமானால் மக்கள்நெறி கெட்டு உயர்வுகுன்றி, எண்ணத்தில் தாழ்ந்து, அழிந்து போவர் என்பது திண்ணம்.

இவ்வாறு கூறுவதால் பெண்டிர் முன்னேற்றத்தை நாம் வரவேற்கவில்லை என்று யாரும் தவறாக எண்ணிவிடக் கூடாது. பெண்டிர் ஆண்களைப்போல் எல்லா உரிமைகளையும் பெற்று வாழல் வேண்டும் என்பதில் நமக்கு எள்ளளவும் கருத்து வேற்றுமை இல்லை. அவர் வாழ்முறையை எண்ணியும், அவர் நிலையை உன்னியும் அம்முன்னேற்ற வழிகளைப் பாதுகாப்பாக அமைத்தல் வேண்டும் என்று மட்டுமே கூறுகின்றோம்.

இயற்கைக் காட்சிகளைக்கண்டு சுவைக்க, மலையேறுவது ஆண்கட்கேயன்றிப் பெண்கட்கும் உரியதாகலாம். இயற்கையிலேயே தாய்மையுணர்வாலும், நாணம், அன்பு முதலிய பண்புகளாலும் மென்மையுடல் கொண்ட அவர், நம்போல் கல்லிலும் முள்ளிலும் கால்வைத்து, முருகுகளையும் பாறைகளையும் மார்பால் பற்றி இவரி முன்னேற மாட்டுவரல்லர்; ஆதலின் அவர்க்கென்று ஒரு செப்பமான வழியமைத்து நம்மோடு அவரையும் அழைத்துச் செல்லல்வேண்டு மென்பதே நாம் கூறும் வழிமுறை.

பயிரே வேலியாகப் பயன்படுமானால், விளைநிலமே விளையாட்டு நிலமாகப் பயன்படுத்தப்படுமானால், தொய்ந்து போகும் பசுங்கொடியையே தூணாக நிறுத்துவோமானால், கடல் நீருக்குப் பனிக்கட்டியாலேயே கரை யமைப்போமானால், மலர்களையும், தழைகளைப்போல் கழனிக்கு எருவாகப் போடுவோமானால் வேட்டை நாய்களைக்காக்கச் செம்மறியாட்டைக் காவலுக்கு வைப்போமானால் என்ன என்ன பயன் விளையுமோ அப்பயன்களே, காக்கப்பட வேண்டிய மென்மைப் பெண்டிர் காத்து நிற்கும் பெண்டிராக ஆவதால் விளையும். இதில் எள்ளளவும் ஐயமே வேண்டாம்.

குற்றவாளியின் சூழ்நிலை, முதலியவற்றை ஆயுங்கால் இயற்கையாக உள்ள மாந்தனின் பண்புகளையும் எண்ணவேண்டும். அதுபோல் அரசியல் அலுவல்களை வகுக்க முற்படுங்கால் அவ்வலுவல்களின் நிலையையும், அவற்றைச் செய்யப்புகுவார் தம் இயற்கைப் பண்புகளையும் எண்ணிப் பொருத்திப் பார்த்தல் வேண்டும். அற்றேல், அத்தகைய ஆராயாத முடிவு நிலத்தைக் கையால் அறைந்தவனின் முடிவாகிவிடும் என்பதை ஆள்வோர்க்கு வலியுறுத்திக் கூறுகின்றோம்.

பண்டாரகர்

மா. இராசமாணிக்கனார் எம்.ஏ.எம்.ஓ.எல்.

அவர்தம் அரிய நூல்கள்.

பழந்தமிழர் வாழ்வு முறைகளையும், வரலாற்றுச் சிறப்புக்களையும், ஆட்சி நெறிகளையும், கலைத் திறன்களையும் செப்பமாக எடுத்துக்கூறும் உயர் தமிழ் நூல்கள்.

இன்றே வாங்கிப் படித்துப் பயனடைக.

தமிழக வரலாறு	3—00
தமிழக ஆட்சி	2—00
தமிழகக் கலைகள்	2—50
தமிழர் நாகரிகமும் பண்பாடும்	2—50
சைவ சமய வளர்ச்சி	5—00
தமிழரசி (புதினம்)	2—50
நாட்டுக்கு நல்லவை	3—50

(தமிழகப் பெண்மணி ஒருத்தியின் சீர்திருத்தச் செயல்களைக்கூறும் அருமையான புதினம்)

விற்பனை உரிமை

பாரி நிலையம்

59. பிராட்வே

சென்னை 1.

அன்பர் பொறுக்க.

அச்சக இடமாற்றத்தின் காரணமாகவும், வெளியூர்ச் செலவினாலும், வேறு பல தடுக்கவியலா இடர்ப்பாடுகளினாலும், ஃபிப்ரவரித் திங்கள் 15-ஆம் நாள் வெளிவரவேண்டிய இதழ் வந்திலது. தென்மொழி அன்பர் பொறுத்துக்கொள்ள வேண்டுகின்றோம். இனி இதழ்கள் குறிப்பிட்ட நாளில் கிடைக்கும்.

— அமைச்சர்.

பதிவு. எண். எம். 7211

'தென்மொழி' உறுப்பினர்க்கு

* தென்மொழி முதல் இசையிலிருந்து உறுப்பினராக விருக்கின்றவர்க்குப் (பொங்கல் மலர் பெற்றவரா யிருப்பினும், பெறாதவராயிருப்பினும்,) பதினான்காம் இசையோடு கட்டணம் முடிவுறுவதால், பதினைந் தாம் இசையிலிருந்து அன்னார் தங்கள் கையொப் பத்தைப் புதுப்பித்துக் கொள்ள வேண்டுகின்றோம். அவ்வாறு முன்னரே புதுப்பிக்காதவருக்குப் பதினைந்தாம் இசையிலிருந்து இதழ்கள் நிறுத்தப் பெறும்.

* அலுவலகத்திற்கு எழுதும் மடல்களில் உறுப்பினர் தங்கள் முகவரிகளைத் தவறாமல் குறிப்பதுடன், தந்தம் உறுப்பினர் எண்களையும், குறிக்குமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

* புதுப்பித்துக்கொள்ளும் பழைய உறுப்பினர் முன் னிருந்த உறுப்பினர் எண்களைத் தவறாது பண விடைத் (Money Order) தாளில் குறித்தனுப்பு மாறு வேண்டுகின்றோம்.

— அமைச்சர்.

தென்மொழி, நெல்லிக்குப்பம், தெ. ஆ. மாவட்டம்.

வள்ளுவர் பதிப்பக உரிமையாளர், கூ. இரா. செகந்நாதன் அவரால் நெல்லிக்குப்பம் (தெ. ஆ. மாவட்டம்) குரு அச்சகத்தில் அச்சிடப்பெற்றுப், பெருஞ்சித்திரன் அவரை ஆசிரியராகக்கொண்டு வெளியிடப்பெற்றது.